இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 94 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 26 – ஞாயிற்றுக்கிழமை 12 நவம்பர் 2023 – சென்னை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 94 : Thiruvalluvar Year - 2054 - Ayppasi 26 - Sunday 12 November 2023 - Chennai 8 Pages ₹ 5.00

## முதல்வர் மு.க.ஸ்டாலினின் - கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினால்

# கிராமப் பொருளாதாரம் பெருமளவு உயர்வு!

## பணப் புழக்கம் அதிகரிப்பு – பெண்கள் உற்சாகம்!

சென்னை, நவ.12-

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினால் கிராமப் பொருளாதாரம் பெருமளவு உயர்ந்துள்ளது. பணப் புழக்கம் அதிகரித்துள்ளதால் பெண்கள் உற்சாகமடைந்துள்ளனர்.**

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் அறிக்கையில் தமிழகத்தில் ஏழை, எளிய குடும்ப பெண்கள் முன்னேற்றம் அடையும் வகையில் மாதம் ரூ.1000 உதவித் தொகை வழங்கப்படும் என்று அறிவித்தார். அதன்படி தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி அமைந்தது. பின்னர் தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் திட்டம் கடந்த செப்டம்பர் 15ம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' தொடங்கி வைத்தார். அதன்படி தமிழ்நாட்டில் வறுமையில் வாடும் 1 கோடியை 13 லட்சத்து 84 ஆயிரத்து 300 குடும்ப தலைவிகள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களின் வங்கி கணக்கிற்கு ஒவ்வொரு மாதமும் தமிழ்நாடு அரசு சார்பில் ரூ.1000 வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், கடந்த 3 மாதங்களாக ஒவ்வொரு மாதமும் தமிழ்நாடு அரசு சார்பில் 'கலைஞர் மகளிர் உரிமை திட்டம்' பயனாளிகளான குடும்ப தலைவிகளுக்கு வங்கி கணக்கிற்கு ஆயிரத்து 138 கோடியே 43 லட்சம் ரூபாய் வரவு வைக்கப்பட்டு வருகிறது. இதனால் குடும்ப தலைவிகள் தங்கள் குடும்பங்களுக்குத் தேவையான மளிகை பொருட்கள் மற்றும் குழந்தைகளுக்கு பால் உள்ளிட்டவை வாங்க மிகவும் பயன்படுத்தி வருகின்றனர். அதேநேரம் பெரும்பாலான பெண்கள் தங்களுக்கு முதல்வர் ஒவ்வொரு மாதமும் வழங்கும் உதவி தொகையை சேமிப்பாக தங்களது வங்கி கணக்கில் வைத்துள்னர். சிலர் வங்கியில் இருந்து எடுத்து தனியாக வீட்டில் சேமித்து வைத்துள்ளனர்.

**வெகு விமரிசையாகக் கொண்டாட்டம்!**

இத்தனை நாட்கள் ஆண்களின் உதவியை நாடி வந்த பெண்கள், உதவித் தொகை மூலம் தங்கள் செலவுகளை யார் தயவும் இன்றி பார்த்து கொள்ளும் நிலை தற்போது உருவாகியுள்ளது.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.11.2023) சென்னை கலைவாணர் அரங்கத்தில், நடைபெற்ற விழாவில், புதிய பயனாளிகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட 7 இலட்சத்து 35 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/– வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்து அடையாளமாக 6 மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM Cards) வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதிமாறன், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர் தாரேஸ் அகமது, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கிராமப்புறங்கள் மற்றும் மலைப்பகுதிகளில் வசிக்கும் ஏழை, எளிய பெண்கள் ஒவ்வொரு ஆண்டும் பண்டிகை காலங்களில் தங்களது குழந்தைகளுக்குத் தேவையான புதிய துணிகள், இனிப்புகள் வாங்கி கொடுக்க முடியாமல் தவித்து வந்தனர். ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர் 'கலைஞர் மகளிர் உரிமை திட்டம்' மூலம் வழங்கும் ரூ.1000 உதவி தொகையால் எந்த ஆண்டும் இல்லாத வகையில், இந்த ஆண்டு தீபாவளி பண்டிகை பட்டித் தொட்டிகளில் உள்ள ஏழை எளிய மக்கள் வெகு விமரிசையாக கொண்டாட திட்டமிட்டுள்ளனர்.

**மகிழ்ச்சியில் திளைத்திருக்கும் மகளிர்**



ஒவ்வொரு மாதமும் 15ம் தேதி கலைஞர் மகளிர் உரிமை திட்ட பயனாளிகளின் வங்கி கணக்கிற்கு ரூ.1000 வரவு வைக்கப்படும். தீபாவளி பண்டிகை இன்று என்பதால், நவம்பர் மாதத்திற்கான உரிமை தொகையை 10ம் தேதியே அனைத்து திட்ட குடும்ப பெண் பயனாளிகளுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் ஆயிரத்து 138 கோடியே 43 லட்சம் ரூபாய் வங்கியில் வரவு வைக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் குடும்ப பெண்களின் வங்கி கணக்கில் கடந்து 3 மாதங்களில் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் 3 ஆயிரத்து 415 கோடியே 29 லட்சம் ரூபாய் வரவு வைக்கப்பட்டுள்ளது.

**தலை தீபாவளியாக கொண்டாட்டம்!**

இதனால் கடந்த 3 மாதங்களில் ஒரு குடும்ப பெண்ணின் வங்கி கணக்கில் தமிழ்நாடு அரசு ரூ.3000 வரவுவைத்துள்ளது. இந்த பணத்தை பெண்கள் இந்த தீபாவளி பண்டிகைக்காக சேர்த்து வைத்து, எப்போதும் இல்லாத வகையில் 'மகிழ்ச்சி தரும் தீபாவளி' யாக கொண்டாட தயாராகி வருகின்றனர். இதனால் தமிழ்நாடு முழுவதும் இந்த தீபாவளியை, பெண்கள் 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட தலை தீபாவளி'யாக கொண்டாடி வருகின்றனர். எனவே இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும் தான் வழக்கத்தை விட கூடுதலாக இந்த ஆண்டு தீபாவளி பண்டிகைக்கு ரூ.3000 கோடி பணம், பழக்கத்தில் உள்ளது.

தீபாவளி பண்டிகையை கொண்டாடாமல் அடுத்தவர்கள் உடைகள், பலகாரங்கள், உணவுகள் வாங்கித் தரமாட்டார்களா என ஏங்கி வந்த பல ஏழை எளிய குடும்பங்கள் இந்த ஆண்டு கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட உதவித் தொகையால் தங்களது குழந்தைகளுக்கு பட்டாசுகள், புதிய துணிகள், இனிப்புகள் வாங்கி வருகின்றனர். குறிப்பாக, கிராமப்புறங்களில் கூட இந்த ஆண்டு வழக்கத்தைவிட தீபாவளி பண்டிகைக்காக பெண்கள் அதிகளவில் செலவுகள் செய்து வருகின்றனர். சிறிய பெட்டிக்கடைகள் முதல் பெரிய மளிகை கடைகள் வரை வழக்கத்தை விட இந்த ஆண்டு அதிகளவில் வியாபாரம் செய்துள்ளனர்.

**சிறு வியாபாரிகள் மகிழ்ச்சி!**

இதனால் கிராம பொருளாதாரம் பெருமளவில் உயர்ந்துள்ளது. எந்த ஆண்டும் இல்லாத அளவில் பெரிய அளவில் பணப் புழக்கம் அதிகமாக இருந்தது. அடுத்த ஆண்டு தீபாவளிக்கு கண்டிப்பாக தமிழக அரசின் நிதி மூலம் சுமார் 12 ஆயிரத்து 156 கோடி ரூபாய் தீபாவளி அல்லது பொங்கல் உள்ளிட்ட பண்டிகை காலங்களில் மக்களிடம் புழக்கத்தில் இருக்கும். ஒன்றிய அரசின் நடவடிக்கைகளால் தற்போது வணிகம் டிஜிட்டல் மயமாகி வருகிறது. இதனால் வங்கிகள்தான் பெரும் லாபம் அடைகின்றன. மக்களுக்கு இழப்புதான் ஏற்படுகிறது.

ஆனால் தமிழக அரசின் இந்த நடவடிக்கை மூலம் மக்கள் பணம், மக்களிடமே சுழற்சி முறையில் சுழன்று வருவதால், பெரிய அளவில் கிராம பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்ற மாநிலமாக தமிழகம் மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, தமிழ்நாடு முழுவதும் ஒரு கோடியே 13 லட்சத்து 84 ஆயிரத்து 300 குடும்ப பெண்கள் இதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மகிழ்ச்சி கலந்த நன்றியை தெரிவித்துள்ளனர். உரிமை திட்டத்தால் தமிழகத்தில் கூடுதல் பணப்புழக்கம் ஏற்பட்டுள்ளதால் சிறு வியாபாரிகள் முதல் பெரிய வியாபாரிகள் வரை மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

---

## தொழிற்சாலைகளுக்கு சதவீத கணக்கில் நிர்ணயிக்கப்பட இருந்த நிலைக் கட்டணம் -

# உச்சநேர நுகர்விற்கான மின் கட்டணம் குறைப்பு!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, நவ. 12 -

தொழிற்சாலைகளுக்கு சதவீத கணக்கில் நிர்ணயிக்கப்பட இருந்த நிலைக்கட்டணம் மற்றும் உச்சநேர நுகர்விற்கான மின்கட்டணம் குறைக்கப்பட்டிருப்பதாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக இருக்கவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில், மின் வாரியத்தில் ஏற்படும் செலவிற்கேற்ப, தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் மின் கட்டணத்தை உயர்த்துவதை வழக்கமாக உள்ளது. கடந்த அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் மின் கட்டணம் 2012ஆம் ஆண்டில் 37 சதவீதமும் 2014ஆம் ஆண்டில், 16.33 சதவீதமும் உயர்த்தப்பட்டது. ஜெயலலிதா ஆட்சி காலத்தில் மட்டும் 53 சதவீதம் மின் கட்டணம் கூடுதலாக உயர்த்தப்பட்டது. குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள் தொடர்ந்து மின் கட்டணத்தை உயர்த்தாவிட்டால் தமிழ்நாட்டிற்கு நிதியுதவியோ, மத்திய நிறுவனங்களிடமிருந்து கடன் உதவியோ தரப்படாது என ஒன்றிய அரசு கடும் விதிமுறைகளை விதித்ததால், 2022-23 முதல் 2026-27 வரையிலான 5 ஆண்டு காலத்திற்கு Multi Year டாரிப் மின் கட்டண மனுவை, கடந்த 2022ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில், தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையத்தின் முன்பு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், சமர்ப்பித்தது. இதனால் ஏற்பட்ட மின்கட்டண மாற்றம் குறித்து, சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் அமைப்புகள் தெரிவித்த கோரிக்கைகளைப் பரிசீலித்து, அவர்களது நலனைப் பாதுகாக்கும் வகையில் கட்டணத்தை மாற்றி அமைத்திட முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

இதன்படி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு ஆண்டு ஒன்றிக்கு 2 ஆயிரம் ரூபாய் கோடி வருவாய் குறைந்தாலும், தொழில் முனைவோரின் நலனைக் கருத்தில் கொண்டு, தொழிற்சாலைகளுக்கு சதவீத கணக்கில் நிர்ணயிக்கப்பட இருந்த நிலைக்கட்டணம் மற்றும் உச்ச நேர (Peak Hour) நுகர்விற்கான மின்கட்டணம் குறைக்கப்பட்டதாகவும் அமைச்சர் தா.மோ. அன்பரசன் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் சுமார் 3 லட்சத்து 37 ஆயிரம் MSME நிறுவனங்கள் பயன் பெற்று வருகின்றன. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் Multi Year டாரிப் ஆணையின்படி, மின்கட்டணம் மாற்றும்போது பொதுமக்களும், தொழில்துறையினரும் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் அறிவுறுத்தியதை அடுத்து, கட்டண உயர்வு விகிதம் மறு ஆய்வு செய்யப்பட்டு, கட்டண உயர்வு 4.7 சதவிகிதத்திலிருந்து 2.18 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்துள்ளார்.

குறு மற்றும் சிறு தொழிற்சாலைகளுக்கான மின் கட்டணத்தை பிற தென்னிந்திய மாநிலங்களோடு ஒப்பிடும் போது தமிழ்நாட்டில் குறைவு என்றும் அமைச்சர் தா.மோ. அன்பரசன் கூறியுள்ளார்.

பிற மாநிலங்களில் மின் வரி (E.Tax) 10 முதல் 15 சதவீதம் வரை வசூலிக்கப்படுகிறது. ஆனால் தமிழ்நாட்டில் 5 சதவீதம் மட்டுமே வசூலிக்கப்படுகிறது. பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் நமது மாநிலத்தில் மின்கட்டணம் மற்றும் நிலைக் கட்டணம் மிகவும் குறைவாகவே உள்ளது என அமைச்சர் தா.மோ. அன்பரசன் தெரிவித்துள்ளார்.

கூடுதல் சலுகைகளாக தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கான உச்ச நேர நுகர்விற்கான மின்கட்டணத்தை ஸ்மார்ட் மீட்டர் பொருத்தப்படும் வரை நடைமுறைப்படுத்துவதை தற்காலிகமாக ஒத்தி வைத்தும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் சோலார் மேற்கூரை மின் உற்பத்தி நெட்வொர்க் கட்டணத்தினை 50 சதவீதம் குறைத்தும் முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

இதனால் ஆண்டுக்கு 50 கோடி ரூபாய் அரசுக்கு செலவாகும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறைக்கான நிதி ஒதுக்கீட்டினை 2021-22 ஆம் நிதி ஆண்டில் 741 கோடி ரூபாயாகவும், 2022-23ஆம் நிதி ஆண்டில் 1025 கோடி ரூபாய் ஆகவும், 2023-24ஆம் நிதி ஆண்டில் ஆயிரத்து 502 கோடியாகவும், ஒவ்வொரு ஆண்டும் உயர்த்தி வழங்கப்பட்டு வருவதாக அமைச்சர் தா.மோ. அன்பரசன் தெரிவித்துள்ளார்.

---

## கர்நாடக பா.ஜ.க. தலைவராக எடியூரப்பாவின் மகன் நியமனம்!

# வாரிசு அரசியல் - பா.ஜ.க.வின் இரட்டை வேடம் அம்பலம்!

பெங்களூரு, நவ. 12 -

கர்நாடக மாநில பா.ஜ.க. தலைவராக எடியூரப்பாவின் மகன் விஜயேந்திராவை அக்கட்சி மேலிடம் நியமித்திருப்பது கர்நாடக பா.ஜ.க.வில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடக சட்டசபை தேர்தலில் பா.ஜ.க. படுதோல்வியை சந்தித்ததை அடுத்து அம்மாநில பா.ஜ.க. தலைவர் பதவியிலிருந்து, நளின் குமார் கட்டீல் ராஜினாமா செய்தார்.

இதைத் தொடர்ந்து, கடந்த 6 மாதங்களாக கர்நாடகா மாநிலத்திற்கு புதிய பா.ஜ.க. தலைவர் நியமனம் செய்யப்படாமல் இருந்தது. இதே போல், கர்நாடக மாநில சட்டசபை எதிர்க்கட்சித் தலைவரையும் பா.ஜ.க. நியமிக்காமல் இருந்தது. இந்த இரு பதவிகளையும் பிடிப்பதில் பா.ஜ.க. நிர்வாகிகளிடையே கடும் போட்டி நிலவியது.

இந்நிலையில், கர்நாடக மாநில பா.ஜ.க. புதிய தலைவராக முன்னாள் முதலமைச்சர் எடியூரப்பாவின் மகன் விஜயேந்திர எடியூரப்பா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

வாரிசு அரசியல் பற்றி பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா போன்ற பா.ஜ.க. தலைவர்கள் மேடைக்கு மேடை விமர்சனம் செய்து வரும் நிலையில், கர்நாடகாவில் முன்னாள் முதலமைச்சர் எடியூரப்பாவின் மகனை, கட்சியின் தலைவராக பா.ஜ.க. மேலிடம் நியமித்துள்ளது.

இதன்மூலம், வாரிசு அரசியல் எதிர்ப்பில் பா.ஜ.க.வின் இரட்டை வேடம் அம்பலமாகியுள்ளது.

இதனிடையே, கர்நாடக மாநில பா.ஜ.க. தலைவராக எடியூரப்பாவின் மகன் விஜயேந்திராவை நியமித்திருப்பது கர்நாடக பா.ஜ.க.வில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.



திருவண்ணாமலையில் தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி மாணவர்களிடம் டிஜிட்டல் கையெழுத்து இயக்கத்தை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார். உடன் சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை எம்.பி., இரா.ஸ்ரீதரன், மு.பெ.கிரி எம்.எல்.ஏ, பெ.சு.தி.சரவணன், எஸ்.பன்னீர்செல்வம், ப்ரியாவிஜயரங்கன், காலேஜ் ரவி, டாக்டர் பிரவீன் ஸ்ரீதரன், சி.ராம்காந்த் உட்பட பலர் உள்ளனர்.

## முத்தமிழறிஞர் கலைஞர் புகழ் பரப்பும் முத்தமிழ்த் தேர்!

# 14ஆம் தேதி சிவகங்கை மாவட்டம் வருகை!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை, நவ. 12-

தமிழக கூட்டுறவுத்துறை அமைச்சரும், சிவகங்கை மாவட்ட கழக செயலாளருமான கே ஆர். பெரிய கருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது. தமிழகத்தில் 94 வயதில் தனது இறுதிநாள் வரை தமிழர்களுக்காக வாழ்ந்து மறைந்த தலைவர் கலைஞர் அவர்கள் இன்றும் தமிழர்களின் இதயத்தில் இடம் பெற்றுள்ளார். இத்தகைய உலகம் போற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தமிழகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது. கழகத்தின் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள், பல்வேறு நலத்திட்ட உதவிகள் மாநிலம் முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக தமிழக முதல்வர் தளபதி அவர்கள் தலைவர் கலைஞர் ஐந்து முறை முதல்வராக இருந்து மக்களுக்கு செய்த சாதனைகளை விளக்கும் வகையில் அரசின் சார்பிலும் விழா நடத்தப்படும் என்று அறிவித்தார். அதன் படி அரசு சார்பில் பல்வேறு விழாக்கள் நடைபெற்று வருகிறது. இந்த விழா சிறப்பாக நடைபெற 12 குழுக்களையும் முதல்வர் அறிவித்தார்.



அந்த குழுவில் எழுத்தாளர் கலைஞர் குழுவில் சார்பில் எனது தலைமையில் குழு அமைக்கப்பட்டது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு செய்த அரும் பணிகள் அவரது பன்முகத்தன்மையை மக்களும் இன்றைய குறிப்பாக இளைஞர்கள் தெரிந்து கொள்ளும் வகையில் பல்வேறு முன்னெடுப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. அதில் தலைவர் கலைஞர் அவர்களுக்கு புகழுக்கு புகழ்சேர்த்திடும் வகையில் முத்தமிழ் தேர் அலங்கார ஊர்தி தயாரிக்கப்பட்டது. அந்த அலங்கார ஊர்தி இம்மாதம் நான்காம் தேதி ஐயன் திருவள்ளு வருக்கு 133அடி உயரத்தில் சிலை அமைத்து பெருமை சேர்த்த தலைவரின் முத்தமிழ் தேர் கன்னியாகுமரியில் துவக்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் நான், அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திருமதிகயல் விழி செல்வராஜ் மற்றும் உறுப்பினர்கள் இடம் பெற்றிருந்தார் கள் அந்த முத்தமிழ் தேர் பல்வேறு மாவட்டங்களில் சென்று மக்களின் வரவேற்பினைப் பெற்றுள்ளது. இதன் தொடர்ச்சியாக வருகிற 14ஆம் தேதி முத்தமிழ் தேர் செவ்வாய்க்கிழமை சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை தரவுள்ளது.

சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை தரும் தேரினை மாவட்ட எல்கையில் மாவட்டக் கழகத்தின் சார்பிலும் அரசின் சார்பிலும் அனைத்து தமிழ் அமைப்புகளை சார்பிலும் பிரமாண்டமான வரவேற்பு தரப்பட உள்ளது. அதை தொடர்ந்து மானாமதுரை வட்டாரம், சிவகங்கை, திருப்பத்தூர், காரைக்குடி, ஆகிய பகுதிகளில் இந்த முத்தமிழ் தேர் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளது.

இந்த தேரினை அனைத்து தரப்பு அரசியல் கட்சி பிரமுகர்களும் தமிழ் ஆர்வலர்களும், கலந்து கொண்டு இந்த தேரினை பார்த்து தலைவர் கலைஞர் அவர்களின் பன்முகத் தன்மையை தெரிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அமைச்சர் பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்து உள்ளார்.

# 800 கோடியை தாண்டிய உலக மக்கள் தொகை!

நியூயார்க், நவ. 12 -

அமெரிக்காவின் மக்கள் தொகை கணக்கெடுப்பு மையம் உலக மக்கள் தொகை 800 கோடியை தாண்டி விட்டதாக தெரிவித்துள்ளது.


கடந்த 2000வது ஆண்டில் உலக மக்கள் தொகை 600 கோடியாக இருந்த நிலையில், 23 ஆண்டுகளில் 200 கோடி அதிகரித்துள்ளது. மக்களின் சராசரி வயது தற்போது 32 ஆக உள்ளதாகவும் இவை 2060ம் ஆண்டில் 39 வயதாகவும் உயரும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1960வது ஆண்டில் இருந்து 2000ஆண்டு வரையிலான காலகட்டத்தில் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 2 மடங்காக இருந்த நிலையில், தற்போது அவை குறைந்துள்ளது.

பெண்கள் கருவுரும் விகிதம் தொடர்ச்சியாக குறைந்து வருவதே இதற்கு காரணம் என கணக்கெடுப்பு மையம் கூறியுள்ளது.

உலகிலேயே மக்கள் தொகை அதிகம் உள்ள நகரங்களின் பட்டியலில் ஜப்பான் நாட்டின் டோக்கியோ முதல் இடம் பிடித்துள்ளது. டோக்கியோவின் மக்கள் தொகை 3,71,94,105 ஆக உள்ளது. பட்டியலில் டெல்லி 3,29,41,309 மக்கள் தொகையுடன் 2ம் இடத்திலும் சீனாவின் ஷாங்காய் 2,92,10,808 3ம் இடத்திலும் உள்ளது.

2,12,96,517 பேருடன் மும்பை 9வது இடத்திலும் 1,53,32,793 பேருடன் கொல்கத்தா 17வது இடத்திலும் 1,36,07,800 பெங்களூரு 23வது இடத்திலும் 1,17,76,147 சென்னை 26வது இடத்திலும் உள்ளதாக கூறப்பட்டிருக்கிறது.



திருப்போரூர் பேரூர் செயலாளரும், பேரூராட்சி தலைவருமான மு.தேவராஜ் – பொதுக்குழு உறுப்பினர் என்.பரந்தாமன் ஆகியோரின் இல்ல மணவிழாவை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ., எம்.பி.க்கள் தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, கா.செல்வம், இரா.கிரிராஜன், கழக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., ஜே.ஜே.எபிநேசர் எம்.எல்.ஏ., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., இரா.மூர்த்தி, இ.ஏ.பி.சிவாஜி, எஸ்.எஸ்.பாலாஜி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.எல். இதயவர்மன், வி.தமிழ்மணி, பா.மதிவாணன், வி.ராமநாதன், எஸ்.கணேசன், மு.இராஜேந்திரன், டி.இராமகிருஷ்ணன், பி.அறிவழகி பாலகிருஷ்ணன், எம்.ஆனந்தன், ஜெ.ஜெய்மதன், இரா.முருகேசன், டி.எ.ராஜி, பி.சாந்தி, பையனூர் சேகர், பச்சையப்பன், டி.யுவராஜ், கோல்டு பிரகாஷ், ஜி.துக்காராம், எம்.நாராயணன், ஜி.ராஜேந்திரன், தி.மு.தனியரசு, எ.வி.ஆறுமுகம், மா.அருள்தாசன், மீ.வே.கருணாகரன், ஜி.தயாளன், க.ஜெயராமன், அ.முருகன், வி.விஜயகுமார், எஸ்.அஸ்கர் அலி, மு.க.ரவி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

## இந்தியாவிலேயே விழிப்புணர்வு கொண்ட மாநிலம்!

# சமூகநீதிக்கு முன்னோடி மாநிலம் தமிழ்நாடு!

## நீட் தேர்வுக்கு எதிராக கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்து அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

திருவண்ணாமலை, நவ. 12-

இந்தியாவிலேயே விழிப்புணர்வு கொண்ட மாநிலம் தமிழ்நாடு என்றும், சமூக நீதிக்கு முன்னோடி மாநிலம் தமிழ்நாடு என்று திருவண்ணாமலையில் தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் நீட் தேர்வு ரத்து செய்யக் கோரி மாணவர்களிடம் டிஜிட்டல் கையெழுத்து இயக்கத்தை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு தொடங்கி வைத்து பேசும் போது குறிப்பிட்டார்.

நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி தி.மு.க. இளைஞர் அணி, மருத்துவ அணி, மாணவர் அணி மற்றும் பொறியாளர் அணி சார்பில் கையெழுத்து இயக்கம் நடத்தப்படுகிறது. அதனை தொடர்ந்து 10.11.2023 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில், திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில், திருவண்ணாமலை கம்பன் மகளிர் கலை அறிவியல் கல்லூரி கலையரங்கில் நீட் தேர்வு ரத்து செய்யக் கோரி மாணவர்களிடம் டிஜிட்டல் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.என்.அண்ணாதுரை எம்.பி தலைமை வகித்தார். கழக பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் பிரவீன்ஸ்ரீதரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம்.ரமேஷ், எஸ்.சதீஷ்குமார், டி.திலீப்குமார், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் மு.க.கௌதமன், இரா.மின்னல்கமல், ஏ.வெங்கடாஜலபதி, ஆ.மாதேஸ்வரன், தேவிமகேந்திரன், மாவட்ட மருத்துவ அணி நிர்வாகிகள் டாக்டர் சவீதாகதிரவன், டி.எம். கலையரசு, டாக்டர் முத்தையாசிவராஜ், சக்திவேல், டாக்டர் எஸ்.விக்னேஷ், டாக்டர் யோகேஸ்வரன், டாக்டர் வி.தமிழரசன், டாக்டர் சதீஷ்குமார், டாக்டர் ரவிக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் காலேஜ் கு.ரவி அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு டிஜிட்டல் கையெழுத்து இயக்கத்தை, பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர் நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ. வேலு தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

அப்போது அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

சரஸ்வதி அம்மாள் அறக்கட்டளையில் தான் பொறுப்பில் இருந்த போது கம்பன் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் தான் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதை நினைவுபடுத்தி பேசியவர் இந்த கல்லூரியில் படித்து சென்ற மாணவிகளின் பலர் அரசுத் துறை அதிகாரிகளாகவும், பல்வேறு கல்லூரிகளில் தலைவராகவும் பேராசிரியர்களாகவும் இருக்கிறார்கள்.



### உதயநிதி ஸ்டாலின் முயற்சி வரவேற்கத்தக்கது!

பலர் என்னை பல இடங்களில் பார்க்கும் பொழுது தாங்கள் கல்லூரியில் படிக்கின்ற காலத்தில் எங்களை மாணவிகளாக நீங்கள் பார்க்காமல் தங்களுடைய மகள்களாக பார்த்து பாதுகாத்து படிக்க வைத்தீர்கள் என்று கூறுவது எனக்கு மிகுந்த பெருமை அளிப்பதாக உள்ளது. எனக்கு பெண் பிள்ளைகள் இல்லை என்ற கவலையை போக்கியது கம்பன் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் படிக்கும் மாணவிகள் தான்.

'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல்' என்ற வள்ளுவரின் பொன்மொழிக்கு ஏற்ப நீட் தேர்வுக்கு எதிராக விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எடுத்திருக்கும் இந்த முயற்சி பெரும் வரவேற்பை பெற்றுள்ளதாகவும், ஒரு இலக்கை அடைய வேண்டும் என்றால் ஆற்றல் அறிவு மக்களிடம் செல்வாக்கு இருப்பவர்களால் தான் முடியும் இவை அனைத்தும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் உள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்கள், மாணவ, மாணவிகள் யார் பேச்சை, கேட்கிறார்கள் என்றால் அனைவரும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சை கேட்கிறார்கள் என்பதால் தான் தமிழ்நாட்டில் பல்வேறு அமைச்சர்கள் இருந்தாலும் நீட் எதிர்ப்பு கையெழுத்து இயக்கத்தை உதயநிதி ஸ்டாலின் கையில் எடுத்துள்ளார். இதற்கு திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்களும் மாணவ, மாணவிகளும் முழு ஒத்துழைப்பு கொடுத்து உதவிட வேண்டும்.

மாணவ, மாணவிகளாகிய உங்களை மருத்துவத்துறையில் தற்பொழுது படிக்க வைக்க ஈன்றெடுத்த பெற்றோர்களுக்கு தடையாக இருப்பது நீட் தேர்வு என்றும், 28க்கும் மேற்பட்ட மாநிலங்களைக் கொண்ட மிகப்பெரிய நாடு இந்தியா என்றும் ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் தமிழக முதல்வர் மட்டும் ஏன் தமிழ்நாட்டில் நீட் தேர்வு ரத்து செய்ய வேண்டும் என்று ஏன் கேட்கிறார்கள் என்றால் இந்தியாவிலேயே விழிப்புணர்வு அதிகம் உள்ள மாநிலம் தமிழ்நாடு என்றும், திராவிட இயக்கங்கள் தான் தமிழ்நாட்டின் அடையாளம்.

### விழிப்புணர்வை உருவாக்கிய இயக்கம்!

ஒரு காலத்தில் ஆண்களுக்கு மட்டும்தான் வாக்குரிமை இருந்த காலங்கள் உண்டு என்றும் சொத்து வைத்திருந்தாலும், வரி கட்டி இருந்தாலும் கூட பெண்களுக்கு வாக்குரிமை வழங்காத காலங்கள் இருந்ததை சுட்டிக்காட்டி பேசிய அவர் நீதிக் கட்சி தான் பெண்களுக்கு வாக்குரிமையை தமிழ்நாட்டில் முதன் முதலில் கொண்டு வந்தது என்று பேசிய அவர் இந்தியாவில் விழிப்புணர்வு உருவாக்கிய இயக்கம் திராவிட இயக்கம்.

ஒரு காலத்தில் ஆஸ்திக்கு ஆண் குழந்தை, ஆசைக்கு பெண் குழந்தை மூடநம்பிக்கைகள் இருந்த காலத்தை, மூடநம்பிக்கைகளை தூக்கி எறிந்து ஒரே வயிற்றில் பிறந்த ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் சொத்தில் சம உரிமை அளித்து சட்டத்தை நிறைவேற்றியது தந்தை பெரியாரும், தலைவர் கலைஞரும் தான்.

தமிழ்நாட்டில் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை உண்டு என்று சட்டத்தை இப்பொழுதுதான் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி அனைத்து மாநிலங்களும் பின்பற்றுகின்றனர். தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய மும்மூர்த்திகளும் பெண்கள் படித்தால் தான் நாட்டின் சமுதாயம் முன்னேறும் என்றும், பெண்களுக்குத்தான் குடும்ப பொருளாதாரத்தை உயர்த்த தெரியும்,

### அனைவரும் ஒத்துழைப்புத் தாரீர்!

பெண்கள் கையில் நாட்டை கொடுத்தால் தான் நாடு வளர்ச்சி அடையும் என்ற அடிப்படையில் பெண்களை படி, படி, படி என்று சொன்ன இயக்கம் திராவிட இயக்கம் இது போல பல்வேறு வரலாறுகள் திராவிட இயக்கத்திற்கு உண்டு.

பல்வேறு வரலாறுகளைக் கொண்ட திராவிட இயக்கம் தற்பொழுது நீட் தேர்விற்கு விலக்கு வேண்டும் என்று தொடர்ந்து அமைச்சர் உதயநிதி தலைமையில் போராடி வருகிறது நாட்டில் பலரும் பல்வேறு வகையில் அவர் அவர்கள் சக்திக்கு ஏற்றார் போல வரிகளை கட்டிக்கொண்டு வருவதாகவும் இதனால் தான் அரசு நடைபெற்று கொண்டு இருக்கிறது.

திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு முதல்வர் கல்வித்துறை, மருத்துவத் துறை, கட்டுமானத் துறை ஆகிய மூன்று துறைகளையும் தனது கண்களாக பாவித்து பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறார் என்றும் கல்வித்துறைக்காக 20 ஆயிரம் கோடிக்கு மேல் ஒதுக்கி கல்வித்துறையை மேம்படுத்த பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதல்வர் நிறைவேற்றி வருகிறார். திராவிட முன்னேற்றக் கழகம், ஒன்றிய அரசுக்கு எதிராகவும், தமிழ்நாட்டு மாணவர்களின் நலன் கருதியும் கையில் எடுத்துள்ள நீட் தேர்வு கையெழுத்து இயக்கத்திற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.

நிகழ்ச்சியில் சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாநில மருத்துவர் அணி துணைத்தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இரா. ஸ்ரீதரன், பொன்.முத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், மாவட்டப் பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணைச் செயலாளர் ப்ரியாவிஜயரங்கன், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன்,

மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, மங்கலம் பிரபாகரன், ஏ.ஏ.ஆறுமுகம், பொன்.தனுசு, சி. ராம்காந்த், பாலமுரளிகிருஷ்ணா, ஒன்றியச் செயலாளர் பெ.கோவிந்தன், கோ. ரமேஷ், கி.ஆறுமுகம், த. செந்தில்குமார், பேரூர் செயலாளர் சி.கே.அன்பு, மாவட்ட துணை அமைப்பாளர்கள் எம்.ஆர்.கலைமணி, கே.கந்தன், எம்.வெங்கடேஷ் உட்பட மாணவர்கள், இளைஞர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

நிறைவாக மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சு.ராஜாங்கம் நன்றி கூறினார்.

## இந்தியாவில் தொழிற்சாலைகளில்

# பெண் ஊழியர்களை அதிகம் கொண்ட மாநிலம்!

## தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது!

புதுடெல்லி, நவ.12-

இந்திய அளவில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் மொத்த பெண் ஊழியர்களின் எண்ணிக்கையில் 43 சதவீதம் ஆகும். அதே போல், சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களை சொந்தமாக நடத்தும் பெண்களின் எண்ணிக்கையில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.

இந்நிலையில் ஒன்றிய தொழிலாளர் அமைச்சகம் வெளியிட்ட 2019-20ம் ஆண்டுக்கான தொழிற்துறை புள்ளி விவரங்களின் படி, இந்திய அளவில் தொழிற்சாலைகளில் 15 லட்சத்து 80 ஆயிரம் பெண்கள் வேலை செய்வதாகவும், இவர்களில் 6 லட்சத்து 79 ஆயிரம் பேர் தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




தமிழ் திரையுலகை புதிய திசை நோக்கி அழைத்துச் சென்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பராசக்தி திரைப்படத்தின், திரைக்கதை வசனத்தை கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு டிஸ்டாக் பதிப்பகத்தார், புதிதாக பதிப்பித்துள்ளனர். அதனை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று வெளியிட்டு வாழ்த்தினார். அதுபோது எம்.எம்.அப்துல்லா எம்.பி., லக்கி கிருஷ்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (10.11.2023) சென்னை கலைவாணர் அரங்கத்தில், நடைபெற்ற விழாவில், புதிய பயனாளிகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் பயன்பெறும் வகையில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/- வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM Card) வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

3-வது வாரமாக 1000-க்கும் மேற்பட்ட இடங்களில் மருத்துவ முகாம்கள்! நவ.15 அன்று

# புதுக்கோட்டை மாவட்டத்தில் - தமிழ்நாட்டின் 3-வது பல் மருத்துவக் கல்லூரி!

## காணொலி மூலம் முதல்வர் திறந்து வைக்கிறார்! அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, நவ.12-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 3வது வாரமாக மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. நலவாழ்வு மையங்கள், நகர்புற சமுதாய சுகாதார நிலையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடங்கள் விரைவில் திறந்து வைக்கப்படும். முதலமைச்சர் அவர்கள், 15.11.2023 அன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாட்டின் 3-வது பல் மருத்துவக் கல்லூரியை காணொளி காட்சி மூலம் திறந்து வைக்கவுள்ளார் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (11.11.2023) சென்னை, அண்ணாநகர் மண்டலம், ஷெனாய் நகர், புல்லா அவென்யூ, கஜலட்சுமி காலனியில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினைத் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

**3-வது வாரமாக மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள்!**

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டில் வாரந்தோறும் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வடகிழக்கு பருவமழையின்போதும், மழைக்கால நோய்களான டெங்கு, இன்புளூயன்சா, டைபாய்டு காய்ச்சல், டையேரியா, சேற்றுப்புண் போன்ற பல்வேறு உபாதகைகளில் இருந்தும், நோய்களில் இருந்தும், பொதுமக்களை காக்கும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

அதன்படி இந்த ஆண்டு டிசம்பர் மாதம் வரை வாரந்தோறும் மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகிறது. 29.10.2023 அன்று 1000 சிறப்பு காய்ச்சல் முகாம்கள் நடத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 1943 முகாம்கள் நடத்தப்பட்டது. மேலும், 2வது வாரமாக 04.11.2023 அன்று 1000 முகாம்கள் நடத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 2,263 முகாம்கள் நடத்தப்பட்டது. தொடர்ந்து 3 வது வாரமாக 1000த்துக்கும் மேற்பட்ட இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் இன்று நடைபெறுகிறது.

மேலும், நவம்பர் மாதத்தில் 18.11.2023 (சனிக்கிழமை), 25.11.2023 (சனிக்கிழமை) ஆகிய தினங்களிலும், டிசம்பர் மாதத்தில், 02.12.2023 (சனிக்கிழமை), 09.12.2023 (சனிக்கிழமை), 16.12.2023 (சனிக்கிழமை), 23.12.2023 (சனிக்கிழமை), 30.12.2023 (சனிக்கிழமை) ஆகிய தினங்களில் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெறவுள்ளது. இம்முகாம்களில் 476 நடமாடும் மருத்துவக் குழுக்கள் மற்றும் 805 பள்ளி சிறார்களுக்கான மருத்துவ குழுக்கள் (RBSK) ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

**நலவாழ்வு மையங்கள்**

பெருநகர சென்னை மாநகராட்சியும், மக்கள் நல்வாழ்வுத் துறையில் பொது சுகாதாரத் துறையும் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. முதலமைச்சர் அவர்கள் டெல்லியில் செயல்பட்டு வரும் ஆம் ஆத்மி மொகுலா கிளினிக்கை போன்று தமிழ்நாட்டில் 708 இடங்களில் நகர்புற நலவாழ்வு மையங்கள் அமைக்கப்படும் என்று 110 விதியின் கீழ் அறிவித்தார்கள். அதில் முதலமைச்சர் அவர்களால் 500 நகர்புற நலவாழ்வு மையங்கள் 06.06.2023 அன்று தொடங்கி வைத்தார்கள். அவை அனைத்தும் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

சென்னையில் மட்டும் வார்டுக்கு ஒன்று என்று 200 இடங்களில் திறக்க திட்டமிடப்பட்டு, 140 நகர்புற நலவாழ்வு மையங்கள் திறந்து வைக்கப்பட்டது. மேலும் தமிழ்நாடு முழுவதும் 152 நகர்புற நலவாழ்வு மையம் கட்டும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது. இவை அனைத்தும் இன்னும் 1 மாத காலத்திற்குள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படும். மீதமுள்ள நகர்புற நலவாழ்வு மையங்களுக்கு இடம் தேர்வு செய்யும் பணி தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது.

**புதுக்கோட்டை மாவட்டத்தில், 3-வது பல் மருத்துவக் கல்லூரி**

15.11.2023 அன்று முதலமைச்சர் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாட்டின் 3-வது பல் மருத்துவக் கல்லூரியை காணொளி காட்சி மூலம் திறந்து வைக்கவுள்ளார். தொடர்ந்து புதுக்கோட்டை மாவட்டத்தில் 17 இடங்களில் கட்டப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களும் திறந்து வைக்கப்படவுள்ளது.

நான் 14.11.2023 அன்று திருவள்ளூர் மாவட்டத்தில் 13 மருத்துவ கட்டிடங்களை நேரில் சென்று திறந்து வைக்கவுள்ளேன். மக்கள் நல்வாழ்வுத் துறையில் 100க்கும் மேற்பட்ட மருத்துவ கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகிறது. வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வரும் 1000க்கும் மேற்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டிடங்கள் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகிறது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர். ஜெ.ராதாகிருஷ்ணன், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி. ஷரண்யா அறி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், மாநகர நல அலுவலர் மரு. எம்.ஜெகதீசன், மாமன்ற உறுப்பினர் திருமதி. மெட்டில்டா கோவிந்தராஜ், மண்டல அலுவலர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நெல்லை கிழக்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிவிப்பு!

நெல்லை, நவ.12-

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் 14.11.2023 செவ்வாய்க்கிழமை காலை 10 மணி அளவில் மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவை தலைவர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெறுகிறது என நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர்



இரா.ஆவுடையப்பன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது.

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் ம.கிரகாம்பெல் தலைமையில் வருகிற 14.11.2023 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள் தவறாமல் பங்கேற்று கருத்துக்களை வழங்கிட கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: பூத்கமிட்டி தொடர்பான பணிகள், கழக வளர்ச்சி பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



காஞ்சிபுரம் மாவட்டத்திற்குட்பட்டவர்கள் பஞ்சாப்பில் நடைபெற்ற தேசிய அளவிலான குங்ஃபூ மற்றும் கராத்தே போட்டியில் தமிழகம் சார்பில் கலந்து கொண்டு இரண்டாம் இடம் பிடித்த வீரர்களுக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் தலைமையில் சாலவாக்கத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது. வெற்றி பெற்ற வீரர்களுக்கு மவாட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து சால்வை போர்த்தி பாராட்டுத் தெரிவித்து வாழ்த்தினார். உடன் சாலவாக்கம் ஒன்றியக் கழகச் செயலாளர் டி.குமார், சாலவாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் சத்யா சக்திவேல், கழக நிர்வாகிகள், முன்னணியினர் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், அண்ணா நகர் மண்டலம், ஷெனாய் நகர், புல்லா அவென்யூ, கஜலக்ஷ்மி காலனி சமுதாய நலக்கூடத்தில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினை நேற்று (11.11.2023) தொடங்கி வைத்து பார்வையிட்டார். உடன் அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மருத்துவர் டி.சி.செல்வவிநாயகம், மாநகர நல அலுவலர் டாக்டர் எம்.ஜெகதீசன், மாமன்ற உறுப்பினர் திருமதி மெட்டில்டா கோவிந்தராஜ், மண்டல அலுவலர் உட்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பண்டிகைக்காக சென்னையிலிருந்து

# சொந்த ஊர்களுக்கு 5 லட்சம் பேர் பயணம்!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தகவல்!

சென்னை, நவ.12-

தீப ஒளி திருநாள் இன்று கொண்டாடப்படுவதால், சென்னை உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் பணி நிமித்தமாக தங்கியிருக்கும் மக்கள் சொந்த ஊர் திரும்பி வருகின்றனர். அவர்களின் வசதிக்காக தமிழ்நாடு அரசு சார்பில் வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. சென்னையில் கோயம்பேடு, கலைஞர் நகர், பூவிருந்தவல்லி, தாம்பரம், மாதவரம் ஆகிய 5 இடங்களில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. பூவிருந்தவல்லி பேருந்து நிலையத்தில் இருந்து இயக்கப்படும் பேருந்துகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் , சென்னையிலிருந்து அரசு பேருந்துகளில் இதுவரை 3 லட்சத்து 62 ஆயிரம் பேர் சொந்த ஊர்களுக்கு பயணமாகி இருப்பதாக தெரிவித்தார்.



மேலும், தேவை ஏற்படும் இடங்களில் மேலும் கூடுதல் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

இதேபோல் தனியார் ஆம்னி பேருந்துகளில் சென்னையில் இருந்து கடந்த 2 நாட்களில் ஒரு லட்சத்து 17 ஆயிரம் பயணிகள் சொந்த ஊர்களுக்குச் சென்றுள்ளனர். அத்துடன் சென்னையில் இருந்து வெளியூர் செல்ல அரசு பேருந்துகளில் மேலும் 2 லட்சத்து 39 ஆயிரம் பேர் முன்பதிவு செய்துள்ளனர். இத்துடன் சென்னையில் இருந்து ரயில்களில் ஆயிரக்கணக்கானோர் சொந்த ஊர்களுக்கு பயணமாக சென்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்திற்குட்பட்டவர்கள்

# குங்ஃபூ - கராத்தே தேசிய போட்டிகளில் வெற்றி பெற்று திரும்பிய வீரர்களுக்கு வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. சால்வை அணிவித்து வாழ்த்தினார்! டி.குமார் பங்கேற்பு!

காஞ்சிபுரம், நவ. 12 -

காஞ்சிபுரம் மாவட்டத்திற்குட்பட்டவர்கள் தேசிய அளவில் நடைபெற்ற குங்ஃபூ மற்றும் கராத்தே போட்டியில் வெற்றி பெற்று திரும்பிய வீரர்களை காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. சாலவாக்கத்தில் வரவேற்று பாராட்டினார்.

பஞ்சாப்பில் நடைபெற்ற தேசிய அளவிலான குங்ஃபூ மற்றும் கராத்தே போட்டியில் தமிழகம் சார்பில் கலந்து கொண்டு இரண்டாம் இடம் பிடித்த வீரர்களுக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் தலைமையில் கழகத்தினர் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்ட சம்பவம் நெகழ்சியை ஏற்படுத்தியுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம் சாலவாக்கத்தில் உள்ள மன் சூரியா குங்ஃபூ இன்டர்நேஷனல் பள்ளியைச் சேர்ந்த 23 பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான குங்பூ மற்றும் கராத்தே போட்டியில் கலந்து கொண்டனர்.

எடை அடிப்படையில் நான்கு பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்ட நிலையில் இந்தியா முழுவதும் 15க்கும் மேற்பட்ட மாநிலங்களில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்டோர் போட்டிகளில் கலந்து கொண்டனர். இதில் தமிழகம் சார்பில் கலந்து கொண்ட 23 வீரர்களும் 9 தங்கம், 9வெள்ளி மற்றும் 5வெண்கலம் ஆகியவற்றை வென்றனர். மேலும், வெற்றி பெற்ற நபர்களின் அடிப்படையில் தமிழகம் சார்பில் கலந்து கொண்ட அணியினர் இரண்டாவது இடத்தை பிடித்தனர்.

இந்நிலையில் இன்று வெற்றி கோப்பையுடன் தாயகம் திரும்பிய வீரர் வீராங்கனைகளுக்கு உத்திர மேரூர் சட்டமன்ற உறுப்பினர் சுந்தர் தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது பட்டாசுகள் வெடித்து பேண்டு வாத்தியங்கள் முழங்க உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து வெற்றி பெற்ற வீரர்களுக்கு மவாட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து சால்வை போர்த்தி பாராட்டுத் தெரிவித்து வாழ்த்தினார்.

அதுபோது சாலவாக்கம் ஒன்றியக் கழகச் செயலாளர் டி.குமார், சாலவாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் சத்யா சக்திவேல், கழக நிர்வாகிகள், முன்னணியினர் வாழ்த்துக்களை தெரிவித்தார். மேலும் அடுத்த வருடம் மலேசியாவில் நடக்க உள்ள போட்டியில் இந்த அணியினர் கலந்து கொள்ள உள்ளது குறிப்பிடத்தக்கது.

திருவள்ளுவர் ஈரடுக்கு மேம்பாலத்திற்கு பொன்விழா எடுப்பதாக தீர்மானம்!

# நெல்லை மாநகராட்சி மாமன்றக் கூட்டம்!

## மேயர் பி.எம்.சரவணன் தலைமையில் நடைபெற்றது!

நெல்லை.நவ.12.-

நெல்லை மாநகராட்சி அலுவலக ராஜாஜி மண்டபத்தில் மாமன்றக் கூட்டம் மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன் தலைமையில் மாநகராட்சி துணை மேயர் கே.ஆர். ராஜு, துணை ஆணையர் தாணு மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன் பேசியதாவது:-

தமிழ்நாடு மாணவர்களின் எதிர்கால நலன் கருதியும் மாணவ, மாணவிகள் மருத்துவராக வேண்டும் என்ற லட்சியத்தை அடைய தடையாக இருக்கும் நீட் தேர்வை அகற்றுவதற்கும் முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எடுத்திருக்கும் நீட் எதிர்ப்பு கையெழுத்து இயக்கம் வெற்றி பெற மாமன்றம் துணை நிற்கும்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இத்தருணத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எல்.சுப்பிர மணியன் முயற்சியால் தொலைநோக்குப் பார்வையில் நெல்லையில் வசிக்கும் மக்களின் தங்கு தடையற்ற போக்குவரத்து வசதிக்காக ஆசியாவிலேயே முதல் ஈரடுக்கு மேம்பாலம் 13.11.1973 ஆம் நாளில் திருவள்ளு வர் ஈரடுக்கு மேம்பாலம் என்ற பெயரில் அப்போதைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

தற்போது மேம்பாலம் அமைத்து 50 ஆண்டுகள் ஆகி உள்ளது.இதனை பொன்விழா ஆண்டாக கொண்டாடிட கலைஞர் அவர்களுக்கு நன்றி செரிக்கும் வகையில் ஈரடுக்கு மேம்பாலத்தின் பொன்விழா ஆண்டாக சிறப்பிக்க விழா எடுக்கலாம் என இம் மாமன்றம் முடிவு செய்கிறது.

இவ்வாறு மேயர் பி.எம். சரவணன் பேசினார்.

## விடுமுறை அறிவிப்பு

இன்று (12.11.2023 - ஞாயிற்றுக்கிழமை) முரசொலி அலுவலகத்திற்கு விடுமுறை. முரசொலியின் அடுத்த இதழ் நாளை மறுநாள் (14.11.2023 - செவ்வாய்க் கிழமை) வழக்கம் போல் வெளிவரும்.

**தலைமை நிர்வாகி**
**முரசொலி**



தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பாக மாநிலத் தலைவர் ரெ.தங்கம் தலைமையில் நடைபெற்ற தீப ஒளி திருநாள் நிகழ்ச்சியில் சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி 100க்கு மேற்பட்ட காதுகேளாதோர், வாய்பேசமுடியா மாற்றுத்திறனாளிகளுக்கு பட்டாசுகள்,இனிப்பு பெட்டகங்களை வழங்கினார். 141அ வட்ட கழக செயலாளர் எஸ்.லெட்சுமிகாந்தன், வர்த்தக அணி மாவட்ட துணை அமைப்பாளர் இரா.கோவிந்தராஜ், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் சரிதா தங்கம், சங்க பொதுச்செயலாளர் எஸ்.சரவணகுமார், சங்க பொருளாளர் எஸ்.நசீம், பி.ஆ.ர்ஒ. பா.சக்திவேல், துணைப்பொதுச்செயலாளர்கள் க.இளங்கோவன், சிஜடி நகர் ஆர்.சீனிவாசன் கி.பத்மநாபன், பா.வெங்கடேசன் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் இளங்கோ, பால்தேவ்,மணி, பிஎஸ்என்எல் முனீர், தி.நகர் கிழக்கு பகுதி மகளிர் அணி நிர்வாகிகள் பவானி ரவி,எலிசபெத், பூங்கொடிகுமரன் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நேற்று முன்தினம் (10.11.2023) நடைபெற்ற விழாவில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட பயனாளிகளுக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து, நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திருச்சிராப்பள்ளி கலையரங்கத்தில் நடைபெற்ற விழா நிகழ்வில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட பயனாளிகளுக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், நகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் இரா.வைத்திநாதன், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.அபிராமி, சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந்தரபாண்டியன், செ.ஸ்டாலின் குமார், ந.தியாகராஜன், எம்.பழனியாண்டி, சீ.கதிரவன், மாவட்ட ஊராட்சித் தலைவர் த.ராஜேந்திரன், மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட பயனாளிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம், கூடலூர் நர்த்தகி மண்டபத்தில் நேற்று முன்தினம் (10.11.2023) நடைபெற்ற கலைஞர் மகளிர் உரிமைத்திட்ட விழாவில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பயனாளிகளுக்கு பணம் எடுக்கும் பற்றட்டை மற்றும் தகவல் கையேடுகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.கீர்த்தி பிரியதர்சினி, நகராட்சி தலைவர்கள் திருமதி.பரிமளா (கூடலூர்), திருமதி.சிவகாமி (நெல்லியாளம்), கூடலூர் ஊராட்சி ஒன்றிய தலைவர் கீர்த்தனா உட்பட பலர் உள்ளனர்.

# பெரியார் சிலையை அகற்றுவேன் என்பது ஆணவத்தின் உச்சம்!

## அண்ணாமலைக்கு பொன்குமார் கண்டனம்!

சென்னை, நவ. 12-

“பெரியார் சிலையை அகற்றுவேன் என்பது ஆணவத்தின் உச்சம்” என்று அண்ணாமலைக்கு தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் கண்டனம் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சி அமைந்தால் தந்தை பெரியார் அவர்களின் சிலைகள் அகற்றப்படும் என ஆணவத்தின் உச்சிக்குச் சென்று அண்ணாமலை பேசியுள்ளார். அவரது இந்த பேச்சுக்கு வன்மையானக் கண்டனத்தை விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி தெரிவித்துக் கொள்கிறது.

மனிதர்களுக்குள் பேதத்தை ஏற்படுத்தி; கல்வி, வேலைவாய்ப்பு பெரும்பாலான மக்களுக்கு மறுக்கப்பட்டு, சமூகத்தின் அடித்தளத்தில் வைத்திருக்க செய்தது; அதைப் போல பெண்களை இழிவுபடுத்தி, அவர்களை அடிமைப் படுத்தி வைத்திருந்தது போன்ற இழி நிலைகளை வேரோடு அகற்றிட வாழ்நாள் முழுவதும் போராடியவர் தந்தை பெரியார் ஆவார். அநீதிக்கு எதிராக போராடிய தந்தை பெரியார் அவர்களின் மறு பெயர் சமூக நீதியாகும். அந்த சமூக நீதி இன்றைக்கு தமிழ்நாட்டை மட்டுமல்ல இந்தியாவையே புரட்டிப் போட வைத்திருக்கிறது. அதனுடைய வெளிப்பாடு தான் நேற்று பீகார் சட்டப் பேரவையில் 65 விழுக்காடு இட ஒதுக்கீட்டுக்கான சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட சமூக நீதி காவலரை, பெரியார் மண்ணில் நின்று கொண்டு, அவருடைய சிலையை அகற்றுவேன் என்று கூறுவது நுனி கிளையின் அமர்ந்து கொண்டு அடி மரத்தை வெட்டுவதற்கு சமமாகும். தந்தை பெரியார் இல்லையெனில், இடஒதுக்கீடு ஏற்பட்டிருக்காவிட்டால் அண்ணாமலை போன்றவர்களால் ஐ.பி.எஸ். அதிகாரி ஆகி இருக்க முடியாது. ஆடு, மாடுகளை தான் இப்படிப்பட்ட சமூகம் மேய்த்துக் கொண்டிருக்க வேண்டிய நிலை நீடித்திருக்கும். அதை எண்ணிப் பார்க்காமல் அண்ணாமலை பேசுவது அற்ப அரசியலுக்காக.

### அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா!

தமிழ்நாட்டில் அடுத்து பாரதிய ஜனதா கட்சி ஆட்சி என அண்ணாமலை ஆசைப்படுவதற்கு கனவு காண்பதற்கு அவருக்கு உரிமை உண்டு. அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா ஆகலாம். யானை மீது ஏற அண்ணாமலை ஆசைப்படலாம். ஆனால் ஆட்டுக்குட்டிகளால் எப்படி யானை மீது ஏறிட முடியும்?. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வகையான கிரிமினல்களையும் பாரதிய ஜனதா கட்சியில் சேர்த்து பொறுப்பை வழங்கி, ஒன்றியத்தில் உள்ள ஆட்சியின் அதிகாரம், பண பலம் இவற்றைக் கொண்டு கட்சி நடத்தி வரும் அண்ணாமலைக்கு பெரியார் மண்ணின் உண்மையான கள நிலவரம் இன்னும் கணக்கிட முடியாதது அவலமாகும்.

தந்தை பெரியார் அவர்கள் ஏன் கடவுள் மறுப்பாளராக மாறினார். சனாதனம், மனுதர்மம், வர்ணாசிரமம் என்ற பெயரால் மக்களை நான்கு வருணங்களாகப் பிரித்து, சாதிகளைக் கெட்டியாக பிடித்துக் கொண்டு, சிறுபான்மையான ஒரு பிரிவினரின் நலனுக்காக பெரும்பான்மையான மக்களை கல்வி மறுக்கப்பட்டு பொருளாதாரத்தில், சமூகத்தில் அடித்தட்டில் வைக்கப்பட்டுள்ள நிலையை ஏற்றுக் கொள்ளாதவர் பெரியார் ; பெண்கள் மேலாடை அணியக்கூடாது, பெண்களுக்கு எந்த உரிமையும் வழங்கக் கூடாது, பெண்கள் கீழ்த்தரமானவர்கள், ஆண்கள் ஒழுக்கக்கேடானவர்களாக இருந்தாலும் வேசி வீடுகளுக்குச் செல்பவர்களாக இருந்தாலும் பெண்கள் ஆண்களை பூசிக்க வேண்டும் என்பன போன்ற மோசமான கருத்துக்களைக் எதிர்த்தவர் பெரியார்.

இவற்றை அடியோடு ஒழித்து, சக மனிதனை சமமாகக் கருதி, அனைவருக்கும் அனைத்தும் என்ற நிலையை ஏற்படுத்திட முனைந்தவர் பெரியார். இதற்கு தடையாக இருப்பது வர்ணாசிரம, மனுதர்மம். இதைத் தாங்கிப் பிடிப்பது இந்து மதம். இந்து மதத்தின் வெளிப்பாடுகள் தான் இதிகாச புராணங்கள். அந்த இதிகாச புராணங்களில் கற்பிக்கப்படும் கடவுள்களின் பெயரால் பெரும்பான்மையான மக்களை மிரட்டி பணிய வைத்து, இந்த அநீதிகளை ஏற்க செய்துள்ள நிலையை எதிர்த்தவர் தந்த பெரியார். இந்த நிலை மாற வேண்டுமேயானால் சாதிகள் ஒழிக்கப்பட்டு, பெண் அடிமை ஒழிக்கப்பட்டு, சமூகத்தில் சமநிலை உயர்த்தப்பட வேண்டும். அதற்கு தடையாக இருக்கும் வருணாசிரமங்களை ஒழிக்க வேண்டும் என்று கருதினார். அதற்காக பயன்படுத்தப்படும் கடவுளை வேரோடு அகற்றினால் தான் மேலே சொல்லப்பட்ட அனைத்தும் நிகழும் என்ற காரணத்தினால் தந்தை பெரியார் கடவுள் மறுப்பாளராக மாறினார். அவர் நடத்திய நீண்ட நெடிய போராட்டத்தின் விளைவாகத்தான் இன்றைக்கு தமிழ்நாட்டில் பெண்களுக்கான மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. அடித்தட்டு மக்களுக்கு கல்வி கிடைத்து, சமூகத்தில் சமநிலை அந்தஸ்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

### இந்தியா முழுவதும் எதிரொலித்திருக்கிறது!

இந்தியாவிலேயே தமிழ்நாடு கல்வியிலும், மருத்துவத்திலும் சிறந்த மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. உலகம் முழுவதும் இருக்கிறவர்கள் மருத்துவத்திற்குத் தேடி வரும் மாநிலமாக தமிழ்நாடும் அதன் தலைநகர் சென்னையுமாக உள்ளது. உயர்கல்வியில் இந்தியாவின் சராசரியை விட இரண்டு மடங்கு தமிழ்நாட்டின் சராசரியாக உள்ளது. பொருளாதாரத்தில், வேலைவாய்ப்பில், தொழில்துறையில் என இந்தியாவிலேயே முதலிரண்டு இடங்களில் தமிழ்நாடு உள்ளது. இந்தியா முழுவதும் இருக்கிற குறிப்பாக வட மாநிலத்தில் இருக்கிற மக்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பு அளித்து வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தக் கூடிய மாநிலமாக தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருப்பதற்கு காரணம் தந்தை பெரியார் என்பதை எவரும் மறுத்து விட முடியாது.

இன்றைக்கு தந்தை பெரியார் அவர்களின் கருத்து தமிழ்நாட்டை தாண்டி இந்தியா முழுவதும் எதிரொலித்திருக்கிறது. அதைத் தான் இன்றைக்கு பீகாரில் பார்க்கிறோம். பல்வேறு மாநிலங்களில் சாதிவாரி கணக்கெடுப்புகள் எடுக்கப்படும் என்ற அறிவித்திருப்பது தந்தை பெரியாரின் கருத்தியலாகும். நேற்று வரை சாதி வாரி கணக்கெடுப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த பாரதிய ஜனதா கட்சி இன்றைக்கு ஜாதி வாரி கணக்கெடுப்பிற்கு நாங்கள் எதிரிகள் அல்ல என்ற மனநிலையை தோற்றுவித்தது பெரியார் என்ற தீப்பந்தமாகும். இந்தியாவைத் தாண்டி உலகம் முழுவதும் தந்தை பெரியார் அவர்களின் கருத்தியல் பிரதிபலித்துக் கொண்டிருக்கிற இந்த வேளையில் சமூக நீதியின் சின்னமாக விளங்கக்கூடிய தந்தை பெரியார் அவர்களின் சிலையை அகற்றுவேன் என்று கூறுவது ஆணவத்தின் உச்சம். உடனடியாக அண்ணாமலை இதற்கு வருத்தம் தெரிவிக்க வேண்டும். பாரதிய ஜனதா கட்சியின் இந்த செயலை விவசாயிகள் தொழிலாளர் கட்சி வன்மையாக கண்டிக்கிறது.

இவ்வாறு பொன்குமார் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## தி.மு.க. வர்த்தகர் அணி

# திருச்சி மண்டலத்திற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள் கூட்டம்!

### தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு !

திருச்சி மண்டலத்திற்குட்பட்ட திருச்சி மத்திய, திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்திய, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, நாகை, மயிலாடுதுறை, திருவாரூர், அரியலூர், பெரம்பலூர், கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தி.மு.க. வர்த்தகர் அணி மாவட்ட நிர்வாகிகள் கூட்டம், எதிர்வரும் 16-11-2023 வியாழக்கிழமை மாலை 3.00 மணியளவில் திருச்சி மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அரங்கில்” கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்கள் தலைமையில், திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ்பொய்யாமொழி, திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, திருச்சி வடக்கு மாவட்டச் செயலாளர் தியாகராஜன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் திருச்சி மத்திய, திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்திய, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, நாகை, மயிலாடுதுறை, திருவாரூர், அரியலூர், பெரம்பலூர், கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தி.மு.க. வர்த்தகர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி நவம்பர்26 அன்று திருச்சியில் நடைபெற உள்ள “கலை இரவு” விழாவினை சிறப்பாக நடத்துவது குறித்து

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 18 -
நாள்: 11 -11- 2023.

**காசி முத்துமாணிக்கம்,**
செயலாளர்
தி.மு.க. வர்த்தகர் அணி

## திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி. மீதான நடவடிக்கை!

# பா.ஜ.க.வின் குறுக்குப் புத்தியை காட்டுகிறது!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, நவ. 12-

திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி., மஹுவா மொய்த்ரா மீதான நடவடிக்கை பா.ஜ.க.வின் குறுக்கு புத்தியை காட்டுகிறது என்று ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம் செய்துள்ளது.



தீக்கதிர்
2023 நவம்பர் 11 சனிக்கிழமை
பாஜகவின் குறுக்கு புத்தி
திரிணாமுல் காங்கிரஸ் எம்பி மஹுவா மொய்த்ரா தொழிலதிபர் தர்ஷன் ஹிரானந்தனியிடம் இருந்து பணம் மற்றும் பரிசுகளை லஞ்சமாக பெற்றதாக பாஜக எம்பி நிஷிகாந்த் துபே மற்றும் உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் ஜெய் அனந்த் தெஹாத்ராய் குற்றம் சாட்டியதால் அதுகுறித்து மக்களவை நெறிமுறைகள் குழு விசாரணை நடத்தியது. குழுவில் பாஜக ஆதரவுடன் 6-4 என்ற வாக்கு வித்தியாசத்தில் மஹுவா மொய்த்ராவை பதவிநீக்கம் செய்ய மக்களவைக்கு குழு பரிந்துரைத்திருப்பதாக செய்திகள் கசிந்துள்ளன.

இதுகுறித்து 11.11.2023 தேதிய தீக்கதிர் நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி.மஹுவா மொய்த்ரா தொழிலதிபர் தர்ஷன் `ஹிரானந்தனியிடம் இருந்து பணம் மற்றும் பரிசுகளை லஞ்சமாகப் பெற்றதாக பா.ஜ.க. எம்.பி. நிஷிகாந்த் துபே மற்றும் உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் ஜெய் அனந்த் தெஹாத்ராய் குற்றம் சாட்டியதால் அதுகுறித்து மக்களவை நெறிமுறைகள் குழு விசாரணை நடத்தியது. குழுவில் பா.ஜ.க. ஆதரவுடன் 64 என்ற வாக்கு வித்தியாசத்தில் மஹுவா மொய்த்ராவை பதவிநீக்கம் செய்ய மக்களவைக்கு குழு பரிந்துரைத்திருப்பதாக செய்திகள் கசிந்துள்ளன.

மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த மஹுவா மொய்த்ரா மக்களவையில் முக்கியமான விவாதங்களில் அரசை கடுமையாக விமர்சித்தவர். இதனால் பா.ஜ.க. ஆத்திரமடைந்தது. மஹுவா மொய்த்ரா சார்ந்திருக்கும் கட்சிக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அரசியல் ரீதியாக முரண்பாடுகள் இருந்த போதிலும் நெறிமுறைக் குழுவில் இடம்பெற்றிருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர், மேற்கண்ட மஹுவாவின் பதவி நீக்கத்திற்கு எதிராக வாக்களித்தார். காரணம் குற்றம் சாட்டப்பட்டவர் தன்னை நிரபராதி என்று நிரூபிக்க போதுமான அவகாசம் வழங்கப்படாமல் அவசர அவசரமாக நெறிமுறை குழு கூடி கலைந்துள்ளது. இவர்மீதான நடவடிக்கை விசயத்தில் மட்டும் அதிவேகமாக நெறிமுறைக் குழு செயல்படவேண்டிய அவசியம் என்ன? தன் மீதான குற்றச்சாட்டுகள் “முற்றிலும் ஆதாரமற்றவை” என்று கூறியுள்ள மொய்த்ரா `ஹிரானந்தனியை வரவழைக்குமாறும், அவரையும் தெஹாத்ராயையும் குறுக்கு விசாரணை செய்வதற்கும் தனக்கு வாய்ப்பளிக்குமாறும் அவர் விடுத்த கோரிக்கையை குழுவின் தலைவரான பா.ஜ.க.வைச் சேர்ந்த வினோத்குமார் வேண்டுமென்றே நிராகரித்திருக்கிறார்.

வேடிக்கை என்னவென்றால் குழுவில் பா.ஜ.க. உறுப்பினர்கள் பெரும்பான்மையாக இடம்பெறுவார்கள் என்று மக்களவைத் தலைவர் அலுவலகம் அறிவித்த பின்னரே அந்தகுழுவில் இடம்பெற பா.ஜ.க. சம்மதித்துள்ளது. மேலும் குற்றச்சாட்டுக்கு உள்ளானவரை முதலில் அழைத்துப் பேசாமல் குற்றம்சாட்டியவரை அழைத்துப் பேசியதும், குழுவின் தலைவர், ஏற்கனவே எழுதி தரப்பட்ட ஒரு கடிதத்தை கூட்டத்தில் படித்ததும் எல்லாம் முன்கூட்டியே திட்டமிட்டதுபோல் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்துகின்றன. மொய்த்ரா மீதான குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இருப்பதாக தெரிவித்த வழக்கறிஞர் ஜெய் அனந்த் தெஹாத்ராய் மற்றும் துபே ஆகியோர், அதை குழுவில் இடம்பெற்ற உறுப்பினர்கள் கேட்ட போது காட்டவில்லை.

நாட்டில் உள்ள இயற்கை வளங்களை சூறையாடி வரும் அதானியைக் கண்டித்து அல்லது அரசுக்கும் அவருக்கும் உள்ள தொடர்பு குறித்து யாராவது கேள்வி எழுப்பினால் பிரதமர் மோடி உள்ளிட்ட ஆளும் கட்சியினரால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. தொடர்ந்து பேசினால் பதவியில் இருந்து தூக்கியெறியப்படுவீர்கள் என்ற மிரட்டலாகவே மொய்த்ரா மீதான நடவடிக்கையை பார்க்க வேண்டியுள்ளது. இத்தகைய நடவடிக்கை ஜனநாயக விரோதமானது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வலைதளங்களில் வலம் வருவது!






நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட தொடக்க பால் உற்பத்தியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் வழங்கினார். உடன் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன் கான்,மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், ஆவின் பொது மேலாளர் தினேஷ்பாபு, கூட்டுறவு சங்கங்கள் இணை பதிவாளர் அழகிரி, மாவட்ட துணைச் செயலாளர் சுரேஷ் உள்பட பலர் உள்ளனர்.

## மசோதாக்களுக்கு ஆளுநர்கள் ஒப்புதல் அளிக்க கால நிர்ணயமே கிடையாது என்பதா?

# முதல்வராக நரேந்திர மோடி இருந்தபோது சொன்னது என்ன?

## ‘நியூஸ் 18’ தொலைக்காட்சி ‘சொல்லதிகாரம்’ நிகழ்ச்சியில் மார்க்சிஸ்ட் கனகராஜ் கேள்வி!

**‘நியூஸ் 18 தொலைக்காட்சி’யில் கார்த்திகைச் செல்வனை நெறியாளராகக் கொண்டு நடைபெற்ற ‘சொல்லதிகாரம்’ நிகழ்ச்சியில் ‘ஆளுநருக்கு எதிராக தமிழ்நாடு அரசு வழக்கு, மாநில உரிமையை உறுதி செய்யுமா உச்சநீதிமன்றம்?’ என்ற விவாதத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கனகராஜின் ஆணித்தரமான விவாதம் வருமாறு:-**

**நெறியாளர் கார்த்திகைச்செல்வன்:** ஆளுநருக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான மோதலில் அரசு நீதிமன்றத்தை நாடி இருக்கிறது. உச்சநீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. காலதாமதம் செய்கிறார், நீண்டகாலத்தை எடுத்துக் கொள்கிறார். நிர்வாகத்தில் ஒரு நெருக்கடியை உண்டாக்கு கிறார் என்ற ஒரு குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது.

இதே நேரத்தில் பஞ்சாப் அரசாங்கம் ஆம் ஆத்மி அரசாங்கம் பன்வாரிலாலுக்கு எதிராக ஒரு வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. அந்த வழக்கும் விசாரணைக்கு வந்திருக்கிறது. இரண்டுமே கோப்புகள் காலதாமதமாக்கப்படுகிறது, நிர்வாகம் முடக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டோடு நீதிமன்றத்தை நாடி இருக்கிறார்கள். தெலங்கானா, மேற்கு வங்கம் என்று நீதிமன்றத்தை நாடக்கூடிய நிலைக்கு மாநில அரசுகள் தள்ளப்பட்டிருக்கின்றனவா? என்ற கேள்வியும் இரண்டு வழக்குகளிலுமே இன்றைக்கு உச்சநீதிமன்றம் ஆளுநருக்கு எதிராக கருத்துகளை பதிவு செய்திருக்கிறது. தங்களுடைய வருத்தத்தை பதிவு செய்திருக்கிறது. ஜனநாயக நடைமுறைக்கு விரோதமானது என்ற பார்வைகள் எல்லாம் இன்றைக்கு பார்க்கின்றோம். இந்நிலையில் தான் ‘ஆளுநருக்கு எதிராக தமிழ்நாடு அரசு வழக்கு மாநில உரிமையை உறுதி செய்யுமா உச்ச நீதின்றம்? என்ற விவாதத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த நிர்வாகியான கனகராஜ் உங்களின் பார்வை?

**மார்க்சிஸ்ட் கனகராஜ்:** ஆளுநர்கள் ஒரு மசோதாவை எவ்வளவு நாட்கள் வைத்து இருக்கலாம். இங்கே சீனிவாசன் பேசும்போது வரையறை இல்லை என்று சொன்னார். அதாவது ஏப்ரல் மாதம் 15 ஆம் தேதி ஒரு பில்லை பாஸ் செய்துட்டு ஜூன் மாதம் 4 ஆம் தேதி இதனை நிறைவேற்றவில்லை மத்திய அரசு எங்கள் கையை முறுக்குகிறது. ஆளுநரை வைத்து ஒரு அரசியல் ஏஜென்டாக செயல்படுகிறது என்று சொன்னால் அதனை எப்படி நாம் பார்க்கிறது? அதாவது ஏப்ரல் 15 ஜூன் 3 ஆம் தேதி இதற்கு இடையில் இருக்கின்ற நாள் 48 நாட்கள்.

நரேந்திர மோடி 2011 ஜூன் மாதம் 3 மற்றும் 4 தேதிகளில் லக்னோவில் நடந்த பா.ஜ.க. தேசிய கவுன்சில் கூட்டத்தில் ஒரு தீர்மானம் (resolution) போடுகிறார். அந்த தீர்மானத்தில் அது எவ்வளவு நாள் என்று பார்த்தால் மூன்று மாதம் ஆகியும் இன்னும் ஒப்புதல் தர வில்லை என்று அவர் நான்கு மசோதாக்களை குறிப்பிடுகிறார்.

5 மாதம் ஆன பிறகும் எங்களுக்கு அசண்ட் கொடுக்கவில்லை என்று மூன்று மசோதாவைக் குறிப்பிடுகிறார். ஒன்றரை மாதம் கொடுக்கவில்லை என்று மூன்று மசோதாக்களை குறிப்பிடுகிறார். இவையெல்லாம் பா.ஜ.க.வின் இணையத்தளத்தில் இருக்கிறது. அதிலிருந்து தான் நான் எடுத்து இங்கே இதனை குறிப்பிடுகிறேன்.

நான் கேட்பது என்னவென்றால், ஒன்றரை மாதத்தில் கொடுக்கவில்லை என்று யூ.பி.ஐ. அரசை அந்த விரட்டு விரட்டியவர்கள், இங்கே வந்து மசோதாக்களுக்கு ஒப்புதல் தர கால நிர்ணயமே கிடையாது என்று சொல்கிறீர்கள்.

பா.ஜ.க.வினர் போட்ட தீர்மானத்தில் தான் இவைகள் எல்லாம் இருக்கு. நீங்கள்(பா.ஜ.க.) தான் வேதம் ஓதி இருக்கீங்க. உங்கள் கேரக்டர் என்ன வென்று நீங்கள் சொல்லுங்கள்.?

அம்பேத்கர் அவர்களை மேற்கோள் காட்டுகிறீர்கள். என்ன மேற்கோள் காட்டுகிறீர்கள் என்றால் அதாவது மாநிலங்கள் ஒன்றியத்தின் ஏஜென்சிகள் அல்ல, யூனியன் மற்றும் மாநிலங்கள் இரண்டும் அரசியலமைப்பின் மூலம் உருவாக்கப்படுகின்றன. இரண்டும் அரசியலமைப்பிலிருந்து அந்தந்த அதிகாரத்தைப் பெறுகின்றன.

என்று அம்பேத்கரை மேற்கோள் காட்டுகிறீர்கள் அப்படி சொல்லிட்டு கேள்வி கேட்டால் என்ன செய்வது.? பா.ஜ.க.வினர் என்ன மாதிரி எடுக்கிறார்கள் என்பதை அவர்களுடைய ஒரே ஒரு தீர்மானத்தில் இருப்பதை மட்டும் இங்கே சொல்லி விடுகிறேன்.

புலனாய்வு அமைப்புகளை தவறாகவும், எதிரிகளைப் பழிவாங்கவும் பயன்படுத்துகிறார்கள். இதனை பா.ஜ.க.வினர் சொல்லி இருக்குறாங்க அதற்கு உதாரணம் என்ன சொல்கிறார்கள் என்றால், விலைவாசி அதிகமாகி விட்டது. நாங்கள் எல்லாம் போராடினோம். உடனே கடத்தல்காரர்களை பிடித்தார்கள். 87 சதவிகிதமான கடத்தல் பிடிச்சது எதிர்க்கட்சி ஆளுகின்ற மாநிலங்களில். இப்போது பா.ஜ.க.வினர் சொல்கிறார்களே, குற்றம் சாட்டப்பட்டு இருக்கின்ற இ.டி. ரெய்டெல்லாம் எதிர்க்கட்சிகள் தான் இதனை அந்தக்காலத்தில் நீங்கள் (பா.ஜ.க.வினர்) கூறியது.

ஆளுநர்கள் அரசியல் ஏஜெண்டாக செயல்படுகிறார்கள். அரசியல்வாதிகளை நியமிக்கக் கூடாது என்று உங்கள் (பா.ஜ.க.) ஸ்டேட்மெண்ட் இருக்கு. தமிழ்நாட்டில் இருந்து மட்டும். ஒரு வேளை சண்முக நாதனை விட்டுட்டு பார்த்தோம் என்றால் தமிழிசை சவுந்தரராசன், சி.பி. இராதாகிருஷ்ணன், இல.கணேசன் மூன்று பேர். இவர்கள் ஆக்டிவாக இருந்த அரசியல் வாதிகளை நீங்கள் ஆளுநர்களாக பயன்படுத்தி இருக்கிறீர்கள்.


கனகராஜ்


ச.கார்த்திகைச்செல்வன்

ஆளுநர்கள் அட்டர்னி ஜெனரலை ஆலோசிக்கக்கூடாது என்று பா.ஜ.க.வினர் அப்போது தீர்மானம் போட்டு இருந்தார்கள். இந்த ஆளுநர் அப்படி நடந்து இருக்கிறாரா.? நான் கேட்பது, அரசியலமைப்புச் சட்டம் சொல்லட்டும். நீதிமன்றம் சொல்லட்டும், மனசாட்சி என்று ஒன்று இருக்கிறது. நீங்கள்(பா.ஜ.க.) போட்ட தீர்மானம் இருக்கிறது. அதற்கு நீங்கள் நியாயமாக இருக்கிறார்களா?

**நெறியாளர்:** சார், சட்டபடிதானே இருக்க வேண்டும், மனசாட்சிப்படி இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா, அவர் கேட்பது நீங்கள் சட்டத்தை பேசப்போறீர்களா, அல்லது மரபை பேசப்போறீர்களா?

**கனகராஜ்:** நான் என்ன கேட்பது. என்னுடைய வார்த்தை என்னுடைய குறிக்கோள் ஒன்றுதானே. மகளிர் ஆணையம் தனியாக மாநிலத்தில் வந்து பேட்டி கொடுக்கக் கூடாது என்று அந்த பா.ஜ.க.வின் மோடி தீர்மானத்தில் இருக்கிறது. அதில் மைக்கல்பெட்டில் அப்படிதான் நடந்து கொண்டீர்களா? தேசிய எஸ்.சி , எஸ்.டி. ஆணையம் தனியாக செய்தியாளர்களை சந்திக்கக் கூடாது, மாநிலங்களுக்கான நிதிப் பகிர்வை 50 சதவிகிதமாக ஆக்கவேண்டும். எங்களை எல்லாம் வஞ்சிகிறீங்க. என்று அப்போது கூறியவர்கள் தான் இப்போது 13 ஆயிரம் கோடி உத்தரப்பிரதேசத்திற்கு கொடுத்துட்டு, இரண்டாயிரம் கோடி தமிழ்நாட்டிற்கு கொடுக்குறீங்க. நீங்க அப்போது எங்களுக்கு வேதம் ஓதி இருக்கீங்க. சி.பி.ஐ, சி.ஐ.சி. நியமனம் அரசிடமிருந்து விடுவிக்க வேண்டும். இது நீங்கள்(பா.ஜ.க.) இயற்றிய தீர்மானம். ஆனால், சி.பி.ஐ. டைரக்டரை திரும்பத் திரும்ப கோர்ட் கூறியப் பிறகும் மூன்று முறை பதவி நீட்டிப்பு கொடுத்தது (பா.ஜ.க. அரசு) நீங்கள்.

மாநில அரசிடம் ஆலோசனை செய்யாமல் எந்த அளவிற்கு அவர்கள் வந்து விட்டார்கள் என்றால் உயர்நீதிமன்ற நீதிபதியைக் கூட மாநில அரசாங்கத்தை ஆலோசிக்காமல் மாத்தக் கூடாது என்று சொன்னார்கள்.

ஆனால் உச்சநீதிமன்றம் கொளுஜியம் மூன்று முறை கூறிய பிறகும் ஜஸ்டிஸ் முரளிதரை தமிழ்நாடு ஒரு பெரிய மாநிலம். பெரிய நீதிமன்றம். இந்த நீதிமன்றத்திற்கு எட்டுமாதம் தலைமை நீதிபதி இல்லை என்றாலும் பரவாயில்லை. முரளிதரன் மட்டும் வந்துவிடக்கூடாது என்று சொன்னது (பா.ஜ.க. அரசு) நீங்கள்.

**நெறியாளர்:** இவைகளை எல்லாம் உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்புகிறதா?

**கனகராஜ்:** ஆமாம், இப்போதும் உச்சநீதிமன்றம் சொல்லிஇருக்கிறது. அப்போதும் சொல்லியிருக்கிறது. வேறு வழி இல்லை நாங்கள் அட்ஜஸ் செய்துபோகிறோம் என்றார்கள். விஸ்வபாரதியில் நரேந்திரமோடி எப்படி சேன்சலர் ஆனார்?

அதாவது அங்கே என்ன எழுதி வைத்திருந்தார்கள் என்றால் சேன்சலர் ஆட்சாரிய ரவீந்திர நாத் தாகூர். இந்த சேன்சலர் என்பதில் ஆட்சாரியாவை வைத்துக் கொண்டு ரவீந்திர நாத் தாகூர் பெயரை தூக்கிட்டு அந்த இடத்தில் ‘நரேந்திர மோடி’ என்று வைத்துள்ளார்கள். என்ன சட்டம் ? பா.ஜ.க.வினர் அந்த அளவிற்கு ரவீந்திர நாத் தாகூரை ஒரு யுனிவர்சிட்டியில் சேன்சிலராக வைத்து இருக்காங்க. அதனை தூக்கி வீசிவிட்டார்கள். அவர்கள் மரபுகளையும் பார்க்க மாட்டீர்கள்.

அப்புறம் ஜி.எஸ்.டி பற்றி எல்லாம் இங்கே சேதுராமன் பேசினார், அவர் சொன்னது எல்லாம் அநியாயம். அவர் அப்படி சொல்லவில்லை ஜி.எஸ்.டி வேண்டாம் அப்படி கொண்டு வந்தால் என் பிணத்தின் மீது தான் நடக்கணும் என்று சொன்னார்.

நான் சேதுராமனிடம் கேட்க விரும்புகிறேன். தமிழக ஆளுநர் சொல்லுவேன் என்று சொன்னது மரபா, சட்டமா, அத்து மீறலா, இதற்கு பெயர் என்ன? தமிழ்நாட்டில் எல்லோருக்கும் தெரியும். சங்கரலிங்கனார் இரண்டு மாதமாக உண்ணா விரதம் இருந்தார்.

**நெறியாளர்:** தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி நடைபெறுகின்றது. இதனை ஆளுநர் முழுவதுமாக பின்பற்ற வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்ப்பது தான் சிக்கல். அதனை ஏன் ஆளுநர் பின்பற்ற வேண்டும். உங்கள் கருத்தியலை ஆளுநர் ஏன் பின்பற்றவேண்டும் என்று கேள்வியை அவர்கள் தொடர்ச்சியாக கேட்கிறார்கள்.

**கனகராஜ்:** ஆளுநர் பின்பற்ற வேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால், இதற்கு எதிராக ஆளுநர் பேசக் கூடாது. அவர் பேச வேண்டும் என்றால் ராஜினாமா செய்துவிட்டு போகட்டும்.

**நெறியாளர்:** அவருடைய சொந்தக் கருத்து, அவர் மேடைக்கு ஏற்ற கருத்தைத் தானே அவர் சொல்கிறார்? ஆளுநர் இப்படித்தான் பேச வேண்டும் என்று சட்டம் இருக்கிறதா?

**கனகராஜ்:** அவர்கள் போடுகின்ற மேடை – என் வரிப்பணத்தில் போடப்படும் மேடை. இப்போது அப்படி போடச் சொல்லுங்களேன். முன்பு என்ன போட்டார் ‘கவர்னர் ஆப் தமிழகம்’ என்று தானே போட்டார், இப்போது போடச் சொல்லுங்களேன் பார்ப்போம். சரி போகுது, சரிபண்ணி விட்டுவிடலாம் என்பதினால் அவர் அப்படி இருக்கிறார். நான் என்ன கேட்கிறேன். ஆளுநர் ரம்மியை தடை செய்ய வேண்டும் என்று பொதுமக்களிடம் கையெழுத்து வாங்கி வந்தால் அவர்களை ஆளுநர் பார்க்க மாட்டார். உள்ளே இருப்பார். ஒரு மசோதாவை அப்ரூவ் செய்யவில்லை என்றால் அதனை திருப்பி அனுப்ப வேண்டும். அவர் வைத்து இருப்பதற்கு அது என்ன குப்பைத் தொட்டியா?

**நெறியாளர்:** ஆளுநர் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுத்தார். அது தான் இன்றைக்கு ரம்மி விஷயத்தில் சரியாக வந்திருக்கிறது என்று சொல்கிறார்களே.

**கனகராஜ்:** நரேந்திர மோடி பிரபோஸ் செய்ததில் என்ன இருக்கிறது என்றால், ஆளுநர் இங்கே தமிழ்நாட்டு வழக்கறிஞரை தான் ஆலோசிக்க வேண்டும். நான் சொல்வது பா.ஜ.க. சொன்னதற்கு நேர்மையாக இருக்க வேண்டும் அல்லவா. இதற்கு நேர் எதிராகத்தான் அவர்கள்(பா.ஜ.க. அரசு) இன்றைக்கு நடந்துக்கிட்டு இருக்கு.

ரம்மியில் ரகசியமாக ரம்மி விளையாட்டை நடத்துபவர்களை சந்திப்பதும், அந்த முதலாளிகளை சந்திப்பதும். ஆனால் அதே சமயத்தில் ரம்மி விளையாட்டுக்கு எதிராக நாங்கள் பெட்டிஷன் கொண்டு வந்து இருக்கோம் என்றால் எங்களை சந்திக்க மறுப்பதற்கும் இடையில் உங்களுடைய உள்நோக்கம் இருக்கிறது. ஆளுநர் இரண்டையும் அல்லவா பரிசீலித்து இருக்க வேண்டும்.

நிறைவாக என் கருத்து, ஆளுநர் மசோதாக்களுக்கு கையெழுத்து போட முடியாது என்றால் போட முடியாது என்று தான் சொல்லவேண்டும். அதனை ரிஜக்ட் செய்கிறேன் என்று சொல்லலாம். அதனால் தான் இந்த மாதிரி சில ஆளுநர்கள் சண்டித்தனம் செய்கிறார்கள். எனவே அவர்கள் ரிஜக்ட் செய்தால் திரும்ப அது வரட்டும், திரும்ப நாங்கள் பாஸ் செய்தால், ஆளுநர்கள் அதனை ஒப்புதல் கொடுத்தே ஆக வேண்டும் என்று அரசியல் சட்டம் சொல்கிறது. அதனைத்தான் நான் கேட்கிறேன்.

இவ்வாறு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த நிர்வாகி கனகராஜ் பேட்டியளித்தார்.

---

### நீலகிரி மாவட்டத்தில் – கூடுதலாக

## 5,731 பேருக்கு கலைஞர் மகளிர் உரிமை திட்ட உதவித் தொகை!

### அமைச்சர் கா.ராமச்சந்திரன் வழங்கினார்!

*நீலகிரி, நவ. 12–*

முதலமைச்சர் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் புதிய பயனாளிகளுக்கு ரூ.1,000/– வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் கூடுதலாக 5731 பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ் பணம் எடுக்கும் பற்றட்டை மற்றும் தகவல் கையேடுகளை வழங்கினார்.

இவ்விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா முன்னிலை வகித்தார்.

இவ்விழாவில் சுற்று லாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்ததாவது:

“மகளிர்களின் உழைப்பை கௌரவப்படுத்தும் நோக்கிலும், பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு அரசு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000/– உரிமைத்தொகை “கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ்” வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்து, அதனை மிகவெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறார்கள்.

அதனடிப்படையில், நீலகிரி மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் முதல் கட்டமாக 1,05,984 பயனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000/– வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இரண்டாம் கட்டமாக நமது மாவட்டத்தில் 5,731 பயனாளிகளை புதியதாக தேர்வு செய்து அவரவர் வங்கி கணக்கில் வைப்புத்தொகை ரூ.1,000/– வரவு வைக்கப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் மிகச் சிறப்பாக செயல்பட்டு வரும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ் 1,11,715 பயனாளிகள் மாதந்தோறும் ரூ.1,000/– பெற்று பயனடைந்து வருகிறார்கள்.

அதேபோல், தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்து மாவட்டங்களிலும் வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தி வேலைநாடுபவர்களை வேலையில் அமர்த்த நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் 2021 முதல் 2023 வரை பல்வேறு முகாம்களின் மூலம் 2,838 வேலைநாடுநர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மகளிர்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணம், புதுமைப் பெண், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவிகள், கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கு ஒய்வ+தியம், 50 வயது முடிந்த திருமணமாகாத ஏழை பெண்களுக்கு ஒய்வூதியம், ஆதவற்ற விதவை ஒய்வூதியம், 2 பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின்கீழ், ரூ.50 ஆயிரம் வழங்கும் திட்டம், பெண்களுக்கு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், திருமண நிதியுதவி திட்டங்கள் உட்பட பல்வேறு திட்டங்களை மகளிர்களின் பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரம் பாது காக்கும் அரசாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு செயல்பட்டு வருகிறது.

மேலும், மகளிர் நலனை கருத்தில்கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்படும் வரலாற்றுச்சிறப்பு மிக்க கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை பெண்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இவ்விழாவில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. கீர்த்தி பிரியதர்சினி, கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் முகமது குதரதுல்லா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மு.திராவிடமணி (கூடலூர்), நகராட்சி தலைவர்கள் திருமதி.பரிமளா (கூடலூர்), திருமதி.சிவகாமி (நெல்லியாளம்), கூடலூர் ஊராட்சி ஒன்றிய தலைவர் திருமதி. கீர்த்தனா, வட்டாட்சியர்கள் திருமதி.ராஜேஸ்வரி (கூடலூர்), கிருஷ்ணமூர்த்தி (பந்தலூர்), திட்டக்குழு உறுப்பினர் ராஜேந்திரன், பேரூராட்சி தலைவர்கள் சித்ரா தேவி (ஒவேலி), செல்வி வள்ளி (தேவர் சோலை), ஊராட்சி மன்றத் தலைவர்கள் சுனில் (ஸ்ரீமதுரை), திருமதி.டெர்மிளா (நெலாக்கோட்டை), திருமதி.லில்லி எலியாஸ் (சேரங்கோடு) உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

### ஆன்லைன் தடைச் சட்டம்;

## உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசின் மேல்முறையீடு வரவேற்கத்தக்கது!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

*சென்னை, நவ. 12–*



தமிழ்நாடு அரசின் ஆன்லைன் தடைச்சட்டம் செல்லும் என்று தீர்ப்பளித்து ரம்மி போன்ற ஆட்டங்களுக்கு விதிவிலக்கா? உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசின் மேல்முறையீடு வரவேற்கத்தக்கது என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஆன்லைன் சூதாட்ட த்தில் தங்களது பணத்தை அளவற்ற முறையில் இழந்து தற்கொலை செய்துகொண்டு தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டோர் அநேகர்.

அதன் காரணமாக, அதைத் தடை செய்ய பல முற்போக்குச் சமூக நல சிந்தனையாளர்களும், கட்சிகளும், இயக்கங்களும் வற்புறுத்தியதால், முந்தைய அ.தி.மு.க. ஆட்சி கொண்டு வந்த சட்டத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்தும், ஜஸ்டிஸ் சந்துரு தலைமையில் ஒரு குழு அமைத்து அறிக்கை பெற்றும் தடைச் சட்டமியற்றியது தி.மு.க. அரசு.

அதனை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கில், சென்னை உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பில், தமிழ்நாடு அரசு இயற்றிய சட்டம் செல்லுபடியாகும் என்று தீர்ப்பளி த்திருந்தும் ‘ரம்மி’ போன்ற சில விளை யாட்டுகள் தடை செல்லாது என்பதாக அளித்த தீர்ப்புப் பகுதி ஏற்புடையதல்ல.

சமூகத்தின் பல பகுதி மக்கள் பெரும் இழப்புக்கு ஆளாகி, தற்கொலைகள் நடைபெறாமல் தடுக்கும் வாய்ப்புக்கு இது உதவாது என்பதால், அதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளதாக சட்ட அமைச்சர் ரகுபதி அவர்கள் அறிவித்திருப்பது பாராட்டி வரவேற்க வேண்டிய ஒன்றாகும். உச்சநீதிமன்றத்தில் நல்ல தீர்ப்பு கிடைக்குமென்று நம்புகிறோம்!

சூதாட்டத்தை “அறிவை விருத்தி செய்யும் ஆட்டம்” என்று வர்ணிப்பது மிகவும் கோணலான சிந்தனை யாகும்!

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



காஞ்சிபுரம் முன்னாள் முரசொலி முகவர் வை .ப. தமிழ்வாணன் தாயார் திருமதி. ப. லோகநாயகி அவர்களின் 13 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு காஞ்சி அன்ன சத்திரத்தில் காலை உணவும், மதியம் நான்காவது வட்டத்தில் உள்ள தர்காவில் மதிய உணவும் காமாட்சி அம்மன் சன்னதி தெருவில் உள்ள வள்ளலார் இல்லத்தில் மதிய உணவும் வழங்கப்பட்டது, சட்டமன்ற உறுப்பினர் சி. வி. எம். பி. எழிலரசன் , முன்னாள் மாவட்ட அவைத் தலைவர் சி. வி. எம். அ. சேகரன், பகுதிச் செயலாளர் கே .திலகர், சி .என்.ஆனந்தன், மாமன்ற உறுப்பினர் எஸ்.பி. பிரவீன்குமார், க. இளந்திரையன், பு. திருவள்ளுவன், பி. சத்யா மற்றும் கழக நிர்வாகி, வை.ப.அழகரசன் அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்



நெல்லை மாவட்டம் திசையன்விளை அருகிலுள்ள அரசூர் பகுதியில் நடைபெற்று வரும் நதிநீர் இணைப்பு திட்டப் பணிகளை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஊராட்சித் தலைவர் ஜெகதீஷ், ஒன்றிய செயலாளர் ஜோசப்பெல்சி, கண்காணிப்பு பொறியாளர் மலர்விழி உட்பட பலர் உள்ளனர்.

### கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் முதல்வர் மனம் மட்டுமல்ல;

# ஒட்டுமொத்த தமிழ்நாடு மக்களின் மனமும் நிறைந்திருக்கிறது!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, நவ. 12-

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மனம் மட்டுமல்ல; ஒட்டுமொத்த தமிழ்நாடு மக்களின் மனமும் நிறைந்திருக்கிறது என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

அது வருமாறு:-

2021ம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்டசபை தேர்தலின்போது, தி.மு.க. தனது தேர்தல் வாக்குறுதியாக மகளிருக்கு தலா 1,000 ரூபாய் உரிமைத் தொகை வழங்கப்படும் என்று அறிவித்தது. அதன்படி அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் காஞ்சிபுரத்தில் இத்திட்டத்தை தொடங்கி வைத்தார். இத்திட்டத்துக்கு 1 கோடியே 6 லட்சத்து 52 ஆயிரம் குடும்பத் தலைவிகள் தகுதியானவர்களாக தேர்வு செய்யப்பட்டனர். அவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 வங்கிக்கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது. மாதம் ரூ.1000 என பெண்களுக்கு ஒரு வருடத்துக்கு ரூ.12 ஆயிரம் இத்திட்டத்தின் மூலம் கிடைக்க உள்ளது.

ஏழை, எளிய பெண்கள், சிறு சிறு உதவிக்கு யாரையும் எதிர்பார்க்க தேவை இல்லாத பொருளாதார விடுதலையை இத்திட்டம் கொடுத்துள்ளது. சிறு வியாபாரம், வணிகம் செய்து பிழைப்பு நடத்தும் பெண்கள், விளிம்பு நிலை பெண்கள் என பல தரப்பினரும் இத்திட்டத்தால் பலன் அடைந்துள்ளனர். தகுதியுடைய அனைத்து பெண்களுக்கும் இந்த திட்டம் சென்றடைய வேண்டும் என்பதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதியாக இருந்தார். எனவேதான் மகளிர் உரிமைத்திட்டத்துக்கு விண்ணப்பித்து நிராகரிக்கப்பட்டவர்கள், மேல்முறையீடு செய்யலாம் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, 11 லட்சத்து 85 ஆயிரம் பேர் மீண்டும் விண்ணப்பம் செய்தனர்.

இவர்களது விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, தகுதியானவர்களுக்கு குறுஞ் செய்திகள் அனுப்பப்பட்டன. மேலும் அனைவருக்கும் மகளிர் உரிமைத்தொகை கிடைப்பதற்கு நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று தொடங்கி வைத்தார். அப்போது, மேல்முறையீடு செய்து தேர்வானவர்களுக்கு ரூ.1,000 வழங்கப்பட்டது. இத்திட்டம் குறித்து அன்று, தமிழ்நாடு சட்ட மன்றத்தில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், ஒரு கோடி பெண்களுக்கு இத்திட்டம் பலனளிக்கும் என்றார். ஆனால், இன்று 1 கோடியே 13 லட்சத்து 84 ஆயிரத்து 300 பேர் இந்த திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.



தினகரன்

நவம்பர் 11, 2023 சனிக்கிழமை

மனம் நிறைந்தது

கடந்த 2021-ம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்டசபை தேர்தலின்போது, திமுக தனது தேர்தல் வாக்குறுதியாக மகளிருக்கு தலா 1,000 ரூபாய் உரிமைத்தொகை வழங்கப்படும் என்று அறிவித்தது. அதன்படி அண்ணா பிறந்தநாளான செப்டம்பர் 15-ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் காஞ்சிபுரத்தில் இத்திட்டத்தை தொடங்கி வைத்தார். இத்திட்டத்துக்கு 1 கோடியே 6 லட்சத்து 52 ஆயிரம் குடும்பத்தலைவிகள் தகுதியானவர்களாக தேர்வு செய்யப்பட்டனர். அவர்களுக்கு மாதந்தோறும் ₹1,000 வங்கிக்கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது. மாதம் ₹1000 என பெண்களுக்கு ஒரு வருடத்துக்கு ₹12 ஆயிரம் இத்திட்டத்தின் மூலம் கிடைக்க உள்ளது.

ஏழை, எளிய பெண்கள், சிறு சிறு உதவிக்கு யாரையும் எதிர்பார்க்க தேவை இல்லாத பொருளாதார விடுதலையை இத்திட்டம் கொடுத்துள்ளது.

இத்திட்டம் இந்தியாவுக்கே முன்மாதிரி திட்டமாக உள்ளது. இத்திட்டத்திற்கான விண்ணப்ப பதிவு முகாமை முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த ஜூலை மாதம் தர்மபுரி மாவட்டம் தொப்பூரில் தொடங்கி வைத்தார். அப்போது அவர், 1989ம் ஆண்டு அப்போதைய முதல்வர் கருணாநிதி தருமபுரியில் தொடங்கி வைத்த மகளிர் சுயஉதவிக் குழு திட்டத்தின் வெற்றியை குறிப்பிட்டார். அதாவது, தர்மபுரியில் விதைத்தால் தமிழ்நாடு முழுவதும் முளைக்கும் என்ற நம்பிக்கையில் தான் மகளிருக்கான உரிமைத்தொகை வழங்கும் திட்டத்தை இங்கே தொடங்கி வைக்கிறேன் எனக் குறிப்பிட்டார்.

அதுபோல், இந்த திட்டம் இப்போது தமிழ்நாடு முழுவதும் விரிவடைந்துள்ளது. “தொண்டை வலி இருந்தாலும், தொண்டு செய்வதில் தொய்விருக்கக் கூடாது என்பதால் வந்திருக்கிறேன். உங்களை பார்க்கும்போது என்னுடைய உடல்வலி குறைந்து, மன மகிழ்ச்சியில் நிறைந்திருக்கிறேன்” என முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்றைய விழாவில் நெகிழ்ச்சிபட பேசினார். அவரது மனம் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாடு மக்களின் மனமும் நிறைந்திருக்கிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சிகளில்

# வாக்குச்சாவடி பாக முகவர் குழு உறுப்பினர்களுக்கான (BLC) ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் சிறப்புரையாற்றினார்!

குமரி, நவ.12-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றியத்திற்கு கேசவன்புத்தன்துறை, மணக்குடி, பள்ளம், ஆத்திக்காட்டுவிளை, உட்பட்ட மேல்கிருஷ்ணன்புதூர், பறக்கை, தர்மபுரம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள 42 வாக்குச்சாவடிகளில் 100 வாக்காளர்களுக்கு 1 முகவர் என்று நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்களுக்கான (BLC) ஆலோசனைக் கூட்டம் 10.11.2023, வெள்ளிக்கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு ஆத்திக்காட்டுவிளை, கிரேஷ் கார்டனில் இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றியச் செயலாளர் ஆ. லிவிங்ஸ்டன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் கலந்து கொண்டு கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். மேலும் வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்களின் (BLC) வருகை பதிவேடு தனித்தனியே ஆய்வு செய்யப்பட்டது. கூட்டத்தில் வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் கு.குமார் சேரலாதன், அணிகளின் நிர்வாகிகள், ஊராட்சி தலைவர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2), வாக்குச்சாவடி பாக முகவர் குழு உறுப்பினர்கள் (BLCs) உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பல இன்னல்களை நமக்கு தந்து கொண்டிருக்கிற ஒன்றிய பா.ஜ.க. அரசை வீழ்த்தும் விதமாக வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற வேட்பாளரை அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் இன்றே அயராது பாடுபட வேண்டும் எனவும் மேலும் களப்பணியை தீவிரப்படுத்த வேண்டும் எனவும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

வருகிற 18.11.2023 (சனிக்கிழமை), 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாட்களில் வாக்குச்சாவடி மையங்களில் நடைபெறும் வாக்காளர் சிறப்பு முகாம்களில் பெயர் சேர்த்தல், நீக்குதல், திருத்தங்கள், முகவரி மாற்றம் செய்தல், ஆதார் எண்ணை வாக்காளர் பட்டியலுடன் இணைப்பு போன்ற பணிகளை இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி பாக முகவர் குழு உறுப்பினர்கள் (BLCs), கழக நிர்வாகிகள் இணைந்து இவ்வாய்ப்பினை பயன்படுத்தி வாக்காளர் பட்டியலில் தகுதியுள்ள வாக்காளர்களை சேர்க்கவும், திருத்தங்களை மேற்கொள்ளவும் வேண்டும் என்று இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.



இராயபுரம் கிழக்கு பகுதி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னட்டு பாக முகவர்கள், கழக நிர்வாகிகளுக்கு தலா 25 கிலோ அரிசி இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார் ஏற்பாட்டில் மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா, ஐட்ரீம் ஆர்.மூர்த்தி ஆகியோர் வழங்கினர். உடன் ஆர்.எம்.டி.ரவீந்திரன், மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், வே.சிவக்குமார், நா.சண்முகம், க.நாகம்மை கருப்பையா, ஆர்.வி.கணேஷ், கே.கோவிந்தராஜ், காட்டன். ஜி.சதிஷ்குமார், எல்.சீனிவாசன், என்.கிருஷ்ணன், பி.கண்ணன், தா.ஜெயபாலன், பி.சேகர், கோ.மோகன், கு.சுந்தர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு தி.மு.க. அரசு நிறைவேற்றி வரும் நலத் திட்டங்கள்!

முனைவர் சு. கிருஷ்ணசாமி
ஐக்கிய நாடுகள் வளர்ச்சித்திட்ட முன்னாள் உறுப்பினர்



சுதந்திரப் போராட்ட தியாகி என். சங்கரய்யா அவர்களுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்க தமிழக ஆளுநர் மறுத்தது சுதந்திரப் போராட்டத் தியாகிகளை அவமதிக்கும் செயலாகும். தமிழகத்தில் சுதந்திரப் போராட்ட வீரர்கள் போற்றப்படுவதில்லை என்று உண்மைக்கு மாறான தவறான கருத்தை தமிழக ஆளுநர் கூறினார். அதற்கு தமிழகத்தைச் சேர்ந்த பல தலைவர்களும், கல்வியாளர்களும் எதிர்ப்பும்மறுப்பும் தெரிவித்தனர். அதற்கு கண்டனமும் தெரிவிக்கப்பட்டது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு அளப்பரியது. தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு பல நலத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அவரது வழியில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் நம் அன்புத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் தேசிய அரசியலில் பெரும்பங்கு ஆற்றி வருவதைப் போல் தேச விடுதலைக்கு பாடுபட்ட சுதந்திரப் போராட்ட வீரர்களுக்குப் பெரும் புகழ் சேர்த்து வருகிறார்.

சுதந்திரப் போராட்ட தியாகிகளைப் போற்றும் வகையில் முக்கிய அறிவிப்புகளை தனது 75வது சுதந்திர தின உரையில் தமிழக முதலமைச்சர் தளபதி அவர்கள் வெளியிட்டார். கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரைப் பெருமைப்படுத்தும் வகையில் 13 அறிவிப்புகளை முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார். வ.உ.சி. யின் நூல்கள் தமிழ்நாடு அரசின் மூலம் வெளியிடப்படும் என்பதோடு வ.உ.சி மறைந்த நாளான நவம்பர் 18 தியாகிகள்திருநாளாக கடைப்பிடிக்கப்படும் என்றும் தமிழக முதலமைச்சர் அவர்கள்அறிவித்தார்.

அதேபோல் மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முதலமைச்சர் அவர்கள் 14 அறிவிப்புகளை வெளியிட்டார். 2002 ஆம் ஆண்டு முழுவதும் பாரதி விழா தமிழக அரசால் நாடெங்கும் கொண்டாடப்பட்டது. பாரதியார் பிறந்தநாளை மகாகவி நாள் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பாரதி இளம் கவிஞர் விருது வழங்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவி குழுவின் வாழ்வாதாரப் பூங்காவிற்கு பாரதியாரின் பெயரை தமிழக அரசு சூட்டியுள்ளது.

இந்திய விடுதலைப் போராட்டத்தின் பவள விழாவையொட்டி கடந்த ஆண்டு வழங்கப்பட்ட தியாகிகளுக்கான ஓய்வூதியம் ரூபாய் 18 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரம் ஆகவும், சுதந்திரப் போராட்ட தியாகிகளின் குடும்ப ஓய்வூதியம் ரூபாய் 9 ஆயிரத்திலிருந்து ரூ.10 ஆயிரம் ஆகவும் உயர்த்தி வழங்கப்படும் என்றும் விடுதலைப் போராட்ட தியாகிகளின் குடும்ப உறுப்பினர்களுக்கு தற்போது வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.10 ஆயிரத்திலிருந்து ரூ.11 ஆயிரம் ஆக உயர்த்தி வழங்கப்படும் என்றும் ஆகஸ்ட் 15ஆம் நாள் ஆற்றிய சுதந்திர தினப் பேருரையில் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

உத்தரப்பிரதேச மாநிலம் காசியில் பாரதியார் வாழ்ந்த வீடு தமிழக அரசின் சார்பாக 18 லட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டது. சென்னை கிண்டி காந்தி மண்டபத்தில் வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச்சிலையும் மருது சகோதரர்களின் திருவுருவச்சிலைகளும் நிறுவப்பட்டுள்ளன. சென்னை தலைமைச் செயலகம் அருகே காமராஜர் சாலையில் சுதந்திர தின பவள விழா நினைவு கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. கடலூரில் தியாகி அஞ்சலை அம்மாள் அவர்களுக்கு சிலை அமைக்கப்பட்டுள்ளது.

சுதந்திரப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கடபதி எத்தலப்பர் அவர்களுக்கு திருப்பூர் மாவட்டத்தில் நினைவு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. சென்னை அருங்காட்சிய வளாகத்தில் காந்தியடிகளுக்கு தமிழக அரசின் சார்பாக அமைக்கப்பட்ட திருவுருவச்சிலையை தமிழக முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

தமிழக அரசு சார்பாக சென்னையில் நிறுவப்பட்ட வ.உ.சிதம்பரனார் அவர்களின் சிலை 02.01.1968 அன்று திறந்து வைக்கப்பட்டது. பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சி காலத்தில் சுதந்திரப்போராட்ட தியாகி ஆந்திர கேசரி பிரகாசம் அவர்களுக்கு தமிழக அரசின் சார்பாக சென்னையில்சிலை நிறுவப்பட்டது. அச்சிலையை 19.10.1968 அன்று தி.மு.க. அரசின் பொதுப்பணித் துறைஅமைச்சர்கலைஞர் அவர்கள்தலைமையில் நடந்த விழாவில் இந்தியக் குடியரசுத்தலைவர் வி.வி.கிரி அவர்கள் திறந்துவைத்தார்.

2006-2011 தி.மு.க. ஆட்சியில் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு இலவசப் பேருந்து பயணச் சலுகை வழங்கப்பட்டது. சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியம் 5.8.1997 முதல் ரூ1,500/ல் இருந்து ரூபாய் 3,000/ஆக உயர்த்தி வழங்கப்பட்டது.

15.08.1997 முதல் சுதந்திரப் போராட்ட தியாகிகளின் குடும்ப ஓய்வூதியம் ரூ 750/ல் இருந்து ரூ.1,500/ஆக உயர்த்தப்பட்டது. 01.05.2007 முதல் இந்த ஓய்வூதியம் ரூபாய் 3,000த்திலிருந்து ரூ.4,000மாக உயர்த்தி வழங்கப்பட்டது அவர்களது குடும்ப ஓய்வூதியம் ரூ. 1,500லிருந்து ரூ.2,000. ஆக உயர்த்தப்பட்டது இதனால் 1024 தியாகிகளும் 2251 சுதந்திரப் போராட்ட தியாகிகளின் குடும்பத்தாரும் பயன்பெற்றனர். மாதம்ரூ.4000/ ஆக இருந்த அவர்களின்விடுதலைப்போராட்ட வீரர்களின் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.5000/ஆகவும். ரூ.2000/ஆகஇருந்தகுடும்ப ஓய்வூதியம் ரூ.2500/ஆகவும்கலைஞர் ஆட்சியில் 2009 ஆம் ஆண்டு உயர்த்தப்பட்டது.

ஆங்கிலேயரை எதிர்த்து வீரத்துடன் முதல் குரல் எழுப்பிய மன்னர் பூலித்தேவன் அவர்களதுவீடு தமிழக அரசால் புதுப்பிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. அவரது சொந்த ஊரான நெல்லைமாவட்டம்நெல்கட்டும்செவலில் தமிழக அரசின் சார்பாக பூலித்தேவன் அவர்களுக்கு நினைவு மண்டபம் கட்டப்பட்டது. மாவீரன்பூலித்தேவன்சிலைதமிழக அரசின் சார்பாக அமைக்கப்பட்டு 26.12.1998 அன்றுதிறந்து வைக்கப்பட்டது.

விடுதலைப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு மரியாதை செய்யும் விதமாக 1974ஆம் ஆண்டு பாஞ்சாலங்குறிச்சியில் கோட்டை கட்டப்பட்டது. அவருடைய வாரிசுகள் 202 பேருக்கு கலைஞரின் தி.மு.க. அரசு தலா 3 ஏக்கர் நிலம் வழங்கியது. கட்டபொம்மன் வாரிசுகளுக்கு வழங்கப்பட்டு வந்த உதவித்தொகை 1996 முதல் உயர்த்தி வழங்கப்பட்டது. வீரபாண்டிய கட்டபொம்மனின் 200வது ஆண்டு விழா 16.10.1999 அன்று அரசு விழாவாக கொண்டாடப்பட்டது. ஒன்றிய அரசின் சார்பாக வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவு அஞ்சல்தலை வெளியிடப்பட்டது. வேலு நாச்சியாரின் படைத் தளபதிகளாக இருந்து ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடி வென்று சிவகங்கைச் சீமையை நிர்வாகம் செய்த மாவீரர்கள் பெரிய மருது, சின்ன மருது ஆகிய மருது சகோதரர்களின் வீரதீர தியாகத்தைப் போற்றும் வகையில் சிவகங்கை மாவட்டம்திருப்பத்தூரில் தமிழக அரசின் சார்பாக மருதுபாண்டியர்நினைவு மண்டபம் கட்டப்பட்டது. அந்த நினைவுமண்டபத்தில்மருது பாண்டியர்களின்சிலைகள்நிறுவப்பட்டன.

மருது. சகோதரர்களின் வாரிசுகளுக்கு வழங்கப்பட்டு வந்த நிதி உதவி ரூ.300/லிருந்து 1976 முதல் ரூ.500 ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. சுதந்திரப் போராட்ட தியாகி சுந்தரலிங்கம் அவரின் பெயரில் பாஞ்சாலங்குறிச்சி அருகில் சொர்ணகிரியில் சங்கரலிங்கம் நினைவுகிராமம்ரூ 1,05,000/ செலவில் உருவாக்கப்பட்டு 27.03.1998 அன்று திறந்து வைக்கப்பட்டது. சுந்தரலிங்கத்தின் வாரிசுகள் 200 பேருக்கு அக்கிராமத்தில் வீடுகள் கட்டித் தரப்பட்டன. ஆங்கிலேயரை எதிர்த்துப் புரட்சியில் ஈடுபட்ட விடுதலைப்போராட்டவீரர் மன்னர்கோபால்நாயக்கர் அவர்களுக்கு திண்டுக்கல்மாவட்டம்விருப்பாட்சியில் நினைவு மணிமண்டபம் கட்டப்பட்டது.

திருநெல்வேலிமாவட்டத்தில்விடுதலைப்போராட்டவீரர்ஒண்டிவீரன்அவர்களுக்கு நினைவுமண்டபம் கட்டப்பட்டது. விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலைக்கு சென்னை கிண்டியில் சிலை அமைக்கப்பட்டது. சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்கள் நினைவு தினம் 25.07.2007 அன்று தமிழ்நாடு அரசால் உள்ளூர் விடுமுறையாக அறிவிக்கப்பட்டது.

சுதந்திரப் போராட்ட தியாகி தில்லையாடி வள்ளியம்மையின் நினைவாக தில்லையாடி வள்ளியம்மை நகர் உருவாக்கப்பட்டது. அந்நகரில் வள்ளியம்மாள் உயர்நிலைப்பள்ளி ஒன்றும் உருவாக்கப்பட்டு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 13.08.1971 அன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்திய விடுதலைப் போராட்டத்தின் பெருந்தலைவர்களில் முக்கியமானவரும் இந்திய தேசிய ராணுவத்தின் நிறுவனத் தலைவருமான மாவீரர் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் அவர்களின் நூற்றாண்டு விழா அரசு விழாவாக கொண்டாடப்பட்டது 1997ஆம் ஆண்டு அவருக்கு, சென்னை கடற்கரை அருகே உள்ள காமராஜர் சாலையில் முழு உருவசிலை அமைக்கப்பட்டு 5.12.1997 அன்று திறந்து வைக்கப்பட்டது.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தூத்துக்குடியில் அவருக்கு அமைக்கப்பட்ட சிலையை இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் 05.09.1972 அன்றுதிறந்து வைத்தார். அந்த விழாவில் அவருக்கு நினைவு தபால் தலை வெளியிடப்பட்டது. அதற்கு அடுத்த ஆண்டு அவர் பிறந்த ஒட்டப்பிடாரம் எனும் ஊரில் அவர் வாழ்ந்த இல்லம் தமிழக அரசால் அரசுடமை ஆக்கப்பட்டு நினைவு இல்லமாக ஆக்கப்பட்டது. அங்கு வ.உ.சி. அவர்களுக்கு அமைக்கப்பட்ட அவரது சிலையை தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 12.05.1973 அன்று திறந்து வைத்தார்.

மிகவும் துன்பத்திற்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் கோவை சிறையில் வ.உ.சிதம்பரனார் இழுத்த செக்கு அங்கிருந்து மீட்கப்பட்டு தமிழக அரசின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்கள் வ.உ.சிதம்பரனார் அவர்களின் தியாகங்களைப் போற்றி அவருக்குமேலும் பல பெருமைகளை சேர்த்து வருகிறார்.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு கிண்டியில் கூடுதலாக ஒரு நினைவு மண்டபம் கட்டப்பட்டு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 2.10. 1996 அன்று திறந்து வைக்கப்பட்டது.

சுதந்திரப் போராட்டத்தியாகி கர்மவீரர் கு. காமராஜ் அவர்களுக்கு தமிழக அரசின் சார்பாக கட்டப்பட்ட மணிமண்டபத்தை தமிழக முதல்வர் கலைஞர்அவர்கள் 02.10.2000 அன்று திறந்துவைத்தார். சுதந்திரப் போராட்டத்தியாகி மூதறிஞர் ராஜாஜி, அவர்களுக்கு அங்கு நினைவு மண்டபம் கட்டப்பட்டது. தியாகிகள் மண்டப வளாகத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் ஆர்யா, சுதந்திரக் கொடியை கோட்டையில் முதன்முதலில் ஏற்றிய வீரத்தியாகி பாஷ்யம் ஆகியோருக்கு அங்கு சிலைகள் நிறுவப்பட்டன.

கன்னியாகுமரியில் பெருந்தலைவர் காமராஜருக்கு நினைவு மண்டபம் கட்டப்பட்டது. சென்னையிலும் நெல்லையிலும் அவருக்கு தமிழக அரசின் சார்பாக சிலைகள் வைக்கப்பட்டன. சென்னையில் மகாகவி பாரதியார் வாழ்ந்த வீடு நாட்டுடைமை ஆக்கப்பட்டு தமிழ்நாடு அரசால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

சுதந்திரப்போராட்டதியாகியும்முன்னாள்முதலமைச்சருமான பி.எஸ்.குமாரசாமிராஜா அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. அவரது சொந்த ஊரான இராஜபாளையத்தில் முக்கிய சாலைக்கு அவருடைய பெயர் சூட்டப்பட்டது

சுதந்திரப் போராட்ட தியாகி சிங்கார வேலர் அவர்களுக்கு சென்னை இராயப்பேட்டையில் சிலை வைக்கப்பட்டது சுதந்திரப் போராட்ட தியாகியும் எல்லைப்போராட்ட வீரருமான ம.பொ.சிவஞானம் அவர்களது நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது ம.பொ.சி. அவர்களுக்கு சென்னையில் சிலை நிறுவப்பட்டது. நாமக்கல் கவிஞர் வீடு நினைவு இல்லமாக்கப்பட்டது. நாமக்கல்லில் உருவான அரசு கல்லூரிக்கு அவரது பெயர் வைக்கப்பட்டது. சென்னை தலைமைச் செயலகத்தில் புதிதாகக் கட்டப்பட்ட 10 மாடிக் கட்டிடத்திற்கு தி.மு.க.அரசு நாமக்கல் கவிஞர் மாளிகை என பெயர் சூட்டி அவருக்கு பெருமை சேர்த்துள்ளது.

சுதந்திரப் போராட்ட தியாகி சர்தார் வேதரத்தினம்பிள்ளை அவர்களுக்குப் பெருமைச் சேர்க்கும் விதமாக தமிழ்நாடு அரசின் முயற்சியால் ஒன்றிய அரசின் மூலம் அவரது நினைவுத் தபால் தலை வெளியிடப்பட்டது

சுதந்திரப் போராட்ட வீராங்கனை ருக்மணி லட்சுமிபதி அம்மாள் அவர்களுக்கு நினைவுத் தபால் தலை வெளியிடப்பட்டது. சென்னை எழும்பூரில் அவருக்கு சிலை வைக்கப்பட்டதோடு சென்னையில் அவர் வாழ்ந்த வீடு உள்ள மார்ஷல்ரோட் அவரது நினைவாக ருக்மணி லட்சுமிபதி சாலை என்று பெயரிடப்பட்டது,

தமிழக அரசின் சார்பாக புதுக்கோட்டை மாவட்டம்திருமயத்தில்சுதந்திரப்போராட்டதியாகிசத்தியமூர்த்திஅவர்களின்சிலை, 21.08.1989 அன்றுதிறந்துவைக்கப்பட்டது.

தி.மு.க.ஆட்சியில் காமராசர் சென்னை கடற்கரையில் அமைந்துள்ள சாலையில் தலைமைச் செயலகம் அருகே தமிழக அரசின் சார்பாக அமைக்கப்பட்ட சுதந்திரதினப் பொன்விழா நினைவுத்தூண் 31.12.1997 அன்றுதிறந்துவைக்கப்பட்டது.

மதுரை திருமங்கலத்தில் சுதந்திரப் போராட்டத் தியாகி விஸ்வநாத தாஸ் அவர்கள் வாழ்ந்த வீடு அரசுடைமை ஆக்கப்பட்டு ரூ. 50 லட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டு 27.3.1998 அன்று தி.மு.க.அரசால் திறந்து வைக்கப்பட்டது.

திருநெல்வேலிமாவட்டம்செங்கோட்டையில்தியாகிவாஞ்சிநாதன்மணிமண்டபம்கட்டப்பட்டது. தருமபுரிமாவட்டம்பாப்பாரப்பட்டியில்தியாகிசுப்பிரமணியசிவாமணிமண்டபம்கட்டப்பட்டது சுதந்திரப் போராட்ட வீரரும், பொதுவுடைமை இயக்க முன்னோடியுமான கவிஞர் ஜீவா அவர்களுக்கு நாகர்கோவிலில் நினைவுமண்டபம் அமைக்கப்பட்டு 19.4.1998 அன்று திறந்து வைக்கப்பட்டது. விடுதலைப் போராட்ட வீரர் வ.வே.சு. ஐயர் அவர்களது சிலையை முதல்வர் கலைஞர் அவர்கள் 31.07.1998 அன்று திறந்து வைத்தார்.

வேலூர் கலகத்தில் உயிர் நீத்த சுதந்திரப் போராட்ட தியாகிகளின் நினைவாக தி.மு.க. அரசு சார்பில் வேலூரில் அமைக்கப்பட்ட நினைவுத் தூண் 20.12.1998 அன்று முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

வேலூர் கலகத்தின் 200வது ஆண்டு விழா 2006 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. தமிழக அரசின் முயற்சியால் இந்திய அரசு மூலம் வேலூர் கலக நினைவுத் தபால் தலை வெளியிடப்பட்டது. வீர தியாக மறவன் எம்டன் செண்பகராமன் அவர்களுக்கு தமிழக அரசின் சார்பாக சென்னை கிண்டி காந்திமண்டபத்தில் நிறுவப்பட்ட அவரது சிலையை தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 07.07.2008 அன்று திறந்து வைத்தார். சுதந்திரப் போராட்டத்தியாகி பசும்பொன் முத்து ராமலிங்க தேவர் நினைவிடத்தில் தி.மு.க. ஆட்சிகாலத்தில் மக்கள் பயன்பாட்டிற்கு பெரிய மண்டபமும், நூற்றாண்டு விழா வளைவும், புகைப்படக்கண்காட்சிக்கூடமும்கட்டப்பட்டன.

தளபதி அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு பல சிறப்புகளைச் செய்து வருகிறது.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சேப்பாக்கம் பகுதி, 114 ஆவது வட்டம், கானா பாக் தெரு பகுதியைச் சேர்ந்த 1500 பேருக்கு நேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தயாநிதிமாறன் எம்.பி., பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் மற்றும் பலர் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியிலுள்ள, 115 அ வட்டம், மல்லன் பொன்னப்பா தெருவைச் சேர்ந்த 1500 பேருக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தயாநிதிமாறன் எம்.பி., பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் மற்றும் பலர் உள்ளனர்.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி, சேப்பாக்கம் பகுதி, 63 ஆ வட்டம், வேலாயுத தெரு பகுதியை சேர்ந்த பொதுமக்கள் 1500 பேருக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நலத்திட்ட உதவிகளை நேற்று வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தயாநிதிமாறன் எம்.பி., பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் மற்றும் பலர் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி, 116 (அ) வட்டம், TB கோவில் தெரு பகுதியைச் சேர்ந்த 1000 பொதுமக்களுக்கு நேற்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தயாநிதிமாறன் எம்.பி., பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் மற்றும் பலர் உள்ளனர்.

### திருத்துறைப்பூண்டியில்

# மகளிர் உரிமைத் தொகை வழங்கும் விழா!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா - பூண்டி கே.கலைவாணன் பங்கேற்பு!

திருவாரூர், நவ.12-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் இரண்டாம் கட்ட விழாவினை தொடர்ந்து, திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டத்திற்குட்பட்ட ஏ.ஆர்.வி. திருமண மண்டபத்தில், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மகளிர்களுக்கு கலைஞர் மகளிர் உரிமை திட்டத்திற்கான பற்று அட்டையினை வழங்கினார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி.கே.கலைவாணன், க.மாரிமுத்து, எம்.செல்வராஜ் எம்.பி., மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ, மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.பாண்டியன், நகர்மன்ற தலைவர் கவிதா பாண்டியன், ஒன்றிய செயலாளர்கள் பிரகாஷ், பால.ஞானவேல், டி.எஸ்.டி.முத்து வேல், கே.வி.கே. ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர்கள் செல்வ. ஜெயதேவன், கலைவாணி மோகன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் ஏ.ஆர்.வி. திருமண மண்டபத்தில் ஆயிரக்கணக்கான மகளிர் திரண்டிருந்த பிரமாண்ட கூட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் 1000 மகளிர்களுக்கு உரிமைத் தொகை பெறுவதற்கான வங்கி பற்று அட்டையினை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வழங்கினார்.

முன்னதாக திருத்துறைப் பூண்டி அரசு மருத்துவமனையில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய இரத்த வங்கி கட்டடத்தினை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா திறந்து வைத்தார்.

திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் 71.18 ச.மீட்டரில், ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய இரத்த வங்கியின் தரைதளத்தில் காத்திருப்பு நுழைவாயில், மருத்துவ பரிசோதனை அறை, ஸ்டெரிலை சேஷன் அறை, ரெப்ரஷ்மெண்ட் அறை, பிளெபோடோமி அறை, செரோலஜி அறை, சேமக்காப்பறை மற்றும் கழிப்பறை வசதிகளுடன் அமையப்பெற்றுள்ளது.

# மோசடிக் கும்பலுடன் பா.ஜ.க. நிர்வாகிகளுக்கு தொடர்பு?

## அண்ணாமலைக்கு பணம் கொடுத்ததாக வெளியான ஆடியோ!

சேலம், நவ. 12-

சேலத்தில் அசோக சின்னத்தை தவறாக பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்டு கைதான முத்துராமன், பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலையின் நடைபயணத்திற்கு பணம் கொடுத்ததாக கூறிய ஆடியோ வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

சேலத்தில் சில நாட்களுக்கு முன்பு ஒன்றிய அரசின் கடன் பெற்றுத் தருவதாக கூறி எம்.எஸ்.எம்.இ கவுன்சில் என்ற அமைப்பின் சார்பில் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. இதில் அந்த அமைப்பின் தேசியத் தலைவர் முத்துராமன், செயலாளரான பஞ்சாபைச் சேர்ந்த துஷ்யந்த் யாதவ், தமிழ்நாடு பிரிவு தலைவரான பா.ஜ.க. பிரமுகரும் நடிகையுமான நமீதாவின் கணவர் சவுத்ரி ஆகியோர் கலந்துகொண்டனர். இதில் நமீதாவும் பங்கேற்ற நிலையில், அசோக சின்னத்தையும் தேசியக்கொடியையும் தவறாக பயன்படுத்தி மோசடியில் ஈடுபடுவதாக புகார் எழுந்தது.

மேலும், எம்.எஸ்.எம்.இ அமைப்பில் மாநில தலைவராக பொறுப்பு கொடுப்பதாக கூறி, பணமோசடி செய்ததாக கோபால்சாமி என்பவர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இதையடுத்து, மோசடியில் ஈடுபட்ட முத்துராமன், துஷ்யந்த் யாதவ் ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த நிலையில், பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலையின் நடை பயணத்திற்கு பணம் கொடுத்ததாக, கோபால்சாமியிடம் முத்துராமன் தெரிவிப்பது போன்ற ஆடியோ வெளியாகி உள்ளது. அதில், ஒன்றிய அமைச்சர் அலுவலகம் குறித்து பேசியிருப்பது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இதனிடையே, சிறையில் உள்ள முத்துராமன், துஷ்வந்த் யாதவ் இருவரும் மகாராஷ்டிர மாநில ஆளுநர் மாளிகையில் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பது போன்ற புகைப்படமும் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### கடலூர் மாவட்டத்தில்

# இரண்டாம் கட்டமாக - கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார்!

கடலூர், நவ. 12-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நேற்று முன்தினம் (10.11.2023) கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் மகளிர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/- வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைதிட்டத்தை தொடங்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து, கடலூர் மாவட்டம், வடலூர் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். அ. அருண் தம்புராஜ், முன்னிலையில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மகளிர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/- பெறுவதற்கான வங்கி பரிவர்த்தனை அட்டையினை வழங்கினார்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செம்மையாக செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக பெண்கள் சுயமாக முன்னேறும் வகையில் மகளிருக்கு இலவசப் பேருந்து பயணம் திட்டம், அரசு பள்ளியில் பயின்ற பெண் குழந்தைகள் உயர்கல்வி பயில ஏதுவாக புதுமைப்பெண் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

குடும்பத்திற்காக அயராது உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழிவகுக்க வேண்டும் என்ற சீரிய நோக்கத்திற்காக குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000/- உரிமைத் தொகையாக வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முன்னோடி திட்டமாக ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’ செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் மாநிலம் முழுவதும் விண்ணப்பங்கள் பெற 24.07.2023 முதல் 04.08.2023 வரை முதல் கட்டமாகவும், 05.08.2023 முதல் 14.08.2023 வரை இரண்டாவது கட்டமாகவும், மேற்சொன்ன இரண்டு கட்டங்களிலும், விடுபட்டவர்களுக்கு 18.08.2023 முதல் 20.08.2023 வரை சிறப்பு முகாம் வழியாகவும் விண்ணப்பங்கள் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்டன. அதன்படி கடலூர் மாவட்டத்தில் இல்லம் தேடி கல்வி தன்னார்வலர்கள், உதவி மைய தன்னார்வலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் மூலம் 1416 முகாம்கள் நடத்தப்பட்டு முதல்கட்ட முகாமில் 3,65,747 விண்ணப்பங்களும், இரண்டாம்கட்டமுகாமில் 2,20,378 விண்ணப்பங்களும், சிறப்பு முகாமில் 22,737 விண்ணப்பங்களும் ஆக மொத்தம் 6,08,862 (78.40%) விண்ணப்பங்கள் வரப்பெற்றது. வங்கி கணக்கு இல்லாத 13,860 நபர்களுக்கு கணக்கு துவங்குவதற்காக சிறப்பு முகாம்கள் 06.10.2023 முதல் 10.09.2023 வரைநடத்தப்பட்டதில் 8,061 நபர்களுக்கு இந்திய அஞ்சல் துறை மூலம் வங்கி கணக்கு துவங்கப்பட்டது. மேலும், 5,799 நபர்களுக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலம் கணக்கு துவங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து, கடலூர் மாவட்டத்தில் 15.09.2023 அன்று முதற்கட்டமாக 4,23,764 குடும்ப தலைவிகளுக்கும், நேற்று முன்தினம் (10.11.2023) இரண்டாம் கட்டமாக 22,148 குடும்ப தலைவிகளுக்கும் என மொத்தம் 4,45,912 குடும்ப தலைவிகள் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை நேரடியாக வங்கி கணக்கில் பெற்று பயனடைந்துள்ளனர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கடலூர் சட்டமன்றஉறுப்பினர் கோ.ஐயப்பன், காட்டுமன்னார் கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனைச் செல்வன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், மாவட்ட வருவாய் அலுவலர் ம.ராஜசேகரன், கடலூர் வருவாய் கோட்டாட்சியர் ச.அதியமான் கவியரசு மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பயனாளிகள் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தொகுதியில் உள்ள துரைசாமிபுரத்தைச் சேர்ந்த சரண்யா,பாண்டீஸ்வரி,சந்தியா ஆகிய மூன்று மாணவிகளுக்கு டி.என்.பி.எஸ்.சி. (குடிமைப் பணிகளுக்கான) தேர்வுகளுக்கு பயில்வதற்கு தேவையான அனைத்து புத்தகத் தொகுப்புகளையும் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்தார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இள.மகிழன் உள்ளார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நேற்று முன்தினம் (10.11.2023) கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் கீழ் மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/– வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து, கடலூர் மாவட்டம், வடலூர் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/– பெறுவதற்கான வங்கி பரிவர்த்தனை அட்டையினை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனைச்செல்வன், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், மாவட்ட வருவாய் அலுவலர் ம.ராஜசேகரன் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பயனாளிகள் கலந்துகொண்டனர்.

# கலைஞரும் நானும் 44

**1984 இல் இந்திய ஆட்சிப்பணித் தேர்வுகளை தமிழில் எழுதி வெற்றிபெற்ற முதல் தேர்வாளர் ஆர்.பாலகிருஷ்ணன். சிந்துவெளி ஆய்வாளர். முத்தமிழ் அறிஞர் கலைஞரைச் சந்தித்து உரையாடிய தருணங்களை நெகிழ்ச்சியுடன் பதிவுசெய்கிறார்.**

■ ஆர்.பாலகிருஷ்ணன், ஐ.ஏ.எஸ் [ஓய்வு], சிந்துவெளி ஆய்வாளர்

# “திருவாரூர் மாப்பிள்ளையாமே!”



## முதல் சந்திப்பு

*1976 ஆம் ஆண்டு கலைஞரை கோபாலபுரத்தில் அவரது இல்லத்தில் முதல்முறையாகச் சந்தித்தேன். எங்கள் கல்லூரி முத்தமிழ் அரங்கில் உரையாற்ற வரவேண்டும் என்று நான் வேண்டுகோள் விடுத்தபோது என்னை ஏற இறங்கப் பார்த்தார். கழக அரசு கலைக்கப்பட்டு நெருக்கடி நிலை அமலில் இருந்த காலகட்டம் அது. மதுரை யாதவர் கல்லூரியில் மு.தமிழ்க்குடிமகனின் மாணவராக இளங்கலை தமிழ் இலக்கியம் இரண்டாம் ஆண்டு படித்துவந்தேன். முத்தமிழ் மன்றத்தின் தலைவராக இருந்தேன்.*

*“இப்போது இருக்கும் அரசியல் சூழ்நிலையில் நீங்கள் என்னை அழைக்கக் கூடாது. நானும் வரக்கூடாது. கல்லூரிக்கும் நல்லதல்ல; உங்கள் எதிர்காலத்தையும் அது பாதிக்கும்” என்றார்.*

*நான் அப்போது ஸ்தாபன காங்கிரஸ் கட்சியில் தீவிரமான மேடைப்பேச்சாளர். ஆட்சிக்கலைப்பைத் தொடர்ந்து எனது அரசியல் நிலைப்பாட்டின் காரணமாக மதுரையில் உள்ள ஒரு முக்கியமான கல்லூரியிலிருந்து நீக்கப்பட்டு சிலமாதங்களுக்கு முன்புதான் யாதவர் கல்லூரியில் சேர்ந்திருந்தேன் என்பதை கலைஞரிடம் தெரிவித்தேன்.*

*கலைஞர் சிரித்து விட்டார். “அது போதாதா” என்று கேட்ட அவர் படிப்பில் கவனம் செலுத்தும் படி என்னை அறிவுறுத்தி அனுப்பிவைத்தார்.*

*1969 இல் பத்து வயதில் ஸ்தாபன காங்கிரஸ் கட்சியின் பேச்சாளராக மேடையேறியவன். 1973 திண்டுக்கல் நாடாளுமன்ற இடைத்தேர்தலின் போது ஒரு கிராமத்தில் எனது மேடைப் பேச்சை பெருந்தலைவர் காமராஜர் கேட்டார். என்னை தனது காரில் ஏற்றிச்சென்ற அவர் “பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவனுக்கு தேர்தல் பிரச்சார மேடையில் என்ன வேலை?” என்று கடிந்து கொண்டார். ”நன்றாக படித்து ஐ.ஏ.எஸ் அதிகாரியாகி நாட்டுக்கு நல்லது செய்” என்றார். ஐ.ஏ.எஸ் என்ற வார்த்தையை எனக்கு அறிமுகம் செய்ததே அவர் தான்.*

*மூன்று ஆண்டுகள் கழித்து அது போன்ற ஓர் அறிவுறுத்தலுடன் கலைஞர் மீண்டும் என்னை நெறிப்படுத்து கிறார். காமராஜர், கலைஞர் போன்ற மாபெரும் தலைவர்களின் கருத்தியல்கள் சந்திக்கும் ஒரு பொதுப்புள்ளி இருக்கிறது அதன் பெயர் “சமூக நீதி” என்ற புரிதல் காலப்போக்கில் எனக்குள் கைகூடி வழிநடத்துகிறது இப்போதும்.*

## திருவாரூர் மாப்பிள்ளை

*நான் 1984 இல் ஆட்சிப்பணிக்கு தேர்வாகி ஒடிசா சென்றுவிட்டேன். 1989 ஆம் ஆண்டு திமுக ஆட்சிக்கு வந்தபோது சட்டப்பேரவைத் தலைவராக எனது பேராசிரியர் தமிழ்க்குடிமகன். விடுமுறையில் சென்னை வந்திருந்த என்னை, முதல்வரை பார்ப்பதற்காக அழைத்துச் சென்றார். எதிர்பார்க்கவே இல்லை. ‘தமிழ்க்குடிமகன் உங்களைப் பற்றி அடிக்கடி குறிப்பிடுவார்’ என்ற கலைஞர் ‘நீங்கள் திருவாரூர் மாப்பிள்ளையாமே’ எனக் கேட்டு இன்னும் நெருக்கமாக உணரவைத்தார்.*

*1997 ஆம் ஆண்டு. காமராஜர் அரங்கம். இயக்குநர் பாரதிராஜாவின் நூல் வெளியீட்டு விழா. முதல்வர் கலைஞர், ஜி.கே மூப்பனார் கலந்து கொண்ட அந்த நிகழ்வில் மேடையில் நானும். மூப்பனார் என்னை நன்கறிந்தவர். கலைஞருக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார். ”பாலகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ்” அவர் சொன்னதும் கலைஞர் உடனே ” தமிழ் இலக்கிய மாணவர், திருவாரூர் மாப்பிள்ளை” என்றார். எத்தனை ஆயிரம் பேரை சந்தித்திருப்பார்? எப்படி இப்படி நினைவில் வைத்து நெருக்கமாக உணரவைக்கிறார் என்று நினைத்துக்கொண்டேன்.*

*ஒடிசா மாநில முன்னாள் முதல்வர் பிஜு பட்நாயக் கலைஞர் மீது பெருமதிப்பு கொண்டவர். 1990- 1994 ஆண்டுகளில் மாநில நிதிக்கழகத்தின் மேலாண்மை இயக்குநராக நான் பணியாற்றிய போது அவரை அடிக்கடி சந்தித்திருக்கிறேன். என் மீது தனி அன்பு காட்டிய அந்த ”உயர்ந்த மனிதர்” 1979 இல் தி.மு.க -அ.தி.மு.க இணைப்பிற்கு தான் முயற்சி எடுத்தது பற்றி கூட என்னிடம் குறிப்பிட்டுள்ளார். தமிழ்நாட்டு அரசியலில் அவருக்கு ஒரு தனி ஈடுபாடு.*

**‘தமிழ்க்குடிமகன் உங்களைப் பற்றி அடிக்கடி குறிப்பிடுவார்’ என்ற கலைஞர் ‘நீங்கள் திருவாரூர் மாப்பிள்ளை யாமே’ எனக் கேட்டு இன்னும் நெருக்கமாக உணரவைத்தார்.**



*1994 ஆம் ஆண்டு நான் ஒன்றிய அரசுப்பணியில் சென்னை வந்துவிட்டேன். ஆனாலும் ஒடிசா முதல்வர் எனக்கு புவனேஸ்வரத்தில் ஒரு வீட்டு மனை ஒதுக்கீடு செய்தார். ”ஓய்வுபெற்றதும் தமிழ்நாட்டிற்கு வந்துவிட வேண்டும்” என்பதில் உறுதியாக இருந்ததால் “அந்த வீட்டு மனை எனக்கு வேண்டாம்” என்று பிடிவாத மாக எழுதிக்கொடுத்து விட்டேன்.*

*கலைஞர் முதல்வராக இருந்தபோது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1998 இல் எனக்கு ஒரு வீட்டு மனையை அரசு நிர்ணயித்த விலையில் ஒதுக்கீடு செய்தது. இதற்கு காரணம் சென்னையில் வசித்த காந்தியவாதியும் சமூகத் தொண்டருமான ஷோபா காந்த தாஸ். அவர் பீகார் மாநிலத்தைச் சேர்ந்தவர். தேசியத்தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணனின் நம்பிக்கைக்கு உரியவர். நெருக்கடிநிலை காலத்தில் பல வட இந்தியத்தலைவர்கள் தமிழ்நாட்டில் தங்க உதவிசெய்தவர்; கலைஞருக்கு நெருக்கமானவர். என்மீது அன்புகொண்டவர்.*

*கலைஞரை நேரில் பார்த்து திரும்பிய அவர் ஒடிசாவிலிருந்த என்னை தொலைபேசியில் அழைத்து “ நீங்கள் தமிழ் மாணவர், திருவாரூர் மாப்பிள்ளை” என்றெல்லாம் சொல்கிறார் அவரை தெரியும் என்று நீங்கள் சொல்லவே இல்லையே என்றார். ”அவரை எல்லோருக்கும் தெரியும்; என்னை அவர் நினைவில் வைத்திருப்பார் என்று எனக்கு எப்படித் தெரியும்” என்று திருப்பிக்கேட்டேன்.*

*2004 ஆம் ஆண்டு. ஒடிசா மாநிலத்தின் தலைமைத் தேர்தல் அதிகாரியாக இருந்தேன். மனைக்கான மாதத்தவணைகளை கட்டிமுடித்த கையோடு கலைஞரைச் சந்திக்க சென்னை வந்தேன். அப்போது அவர் எதிர்க்கட்சித்தலைவர். வந்த நோக்கத்தைச் சொல்லி “நன்றி” தெரிவித்தேன். “அப்படியா நினைவில்லையே” என்று அருகிலிருந்த சண்முகநாதனிடம் கேட்டார். அவர் உறுதிசெய்ததும் ”எனக்கு நினைவில் இல்லை. நினைவில் இருக்கவும் கூடாது. ஆனாலும் நீங்கள் மறக்காமல் நன்றி சொல்லவந்ததும் சரி தான். மகிழ்ச்சி” என்றார். பிறகு எனது பணி குறித்து விசாரித்தார். பிஜூ பட்நாயக் பற்றிய நினைவுகளையும் பகிர்ந்துகொண்டார்.*

## கலைஞர் மகிழ்வார்

*2007 ஆம் ஆண்டு. டில்லியில் இந்தியத் தேர்தல் ஆணையத்தில் துணை ஆணையராக பணியாற்றி வந்தேன். சிந்துவெளிப் பண்பாடு குறித்து தொடர்ச்சியாக ஆய்வுகள் செய்து வந்த நான், சங்க இலக்கியம் குறிப்பிடும் நூற்றுக்கணக்கான தமிழ் அடையாள இடப்பெயர்கள் சிந்துவெளிப்பண்பாட்டு நிலப்பகுதிகளில் இன்றும் வழக்கில் இருப்பதைக் கண்டறிந்தேன். ”இந்த ஆதாரங்களை கலைஞர் அறிந்தால் எவ்வளவு மகிழ்ச்சி அடைவார்” என்று கூறினார் என் மனைவி.*

*2008 ஆம் ஆண்டு மடிக்கணினி தரவுகள், வரைபடங்களுடன் கலைஞரை அவரது வீட்டில் சந்தித்தேன். இந்த புதிய தகவல்கள் வியப்பாக இருக்கிறதே என்றவர் இதை நீங்கள் அறிஞர்கள் அவையில் பெருந்திரையில் விளக்கவேண்டும் என்றார். 2010 ஆம் ஆண்டு கோவை செம்மொழி மாநாட்டில் ஆய்வுரை நிகழ்த்த அழைப்பு வந்தது. அஸ்கோ பர்போலா, ஐராவதம் மகாதேவன் ஆகியோர் அமர்ந்திருந்த ஆய்வரங்கில் சிந்துவெளியின் “கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகத்தை” உலகுக்கு அறிவித்த அந்தத் தருணம் இன்றும் நினைவில். கலைஞர் அளித்த யோசனையை அவர் கூட்டிய செம்மொழி மாநாட்டில் நிறைவேற்றி நிறைவாக உணர்ந்தேன்.*

## மகத்தான கலைஞர்

*“கலைஞர் மறைந்தார்” என்ற செய்தி வெளியானபோது நான் ஒடிசா மாநில முதல்வர் மற்றும் பல உயரதிகாரிகளுடன் ஒரு முக்கியமான நிகழ்வில் மும்பையில் இருந்தேன். மனம் சென்னையில் இருந்தது. புகழ்பெற்ற ஒடிசா மாநில மணல்சிற்பக் கலைஞர் பத்மஸ்ரீ சுதர்சன் பட்நாயக்கை தொலைபேசியில் அழைத்தேன். எனது மனஓட்டத்தை நொடியில் புரிந்து கொண்டார். ஒடிசாவில் வங்கக் கடற்கரையில் கலைஞரின் மணற்சிற்பத்தை உருவாக்கினார். சென்னையில் வங்கக்கடற்கரையில் அவர் துயில்வதற்கு இடம்கோரி சட்டப் போராட்டம் நடந்து கொண்டிருந்தபோது, அதே வங்கக் கடற்கரையில் ஒடிசாவில் அவரது மணச்சிற்பம். மும்பையில் அரபிக்கடலோரம் அந்த மாபெரும் விடுதியின் அரங்கில் இருந்தபடி மணற்சிற்பத்திற்கு TRIBUTE TO KALAIGNAR THE LEGEND 1924 – 2018 என தலைப்பு எழுதி குறுந்தகவல் அனுப்பினேன். அந்த மணற்சிற்பம் இப்போது படமாகத்தான் இருக்கிறது. ஆனால் மகத்தான மக்கள் தலைவர் கலைஞர் என்கிற மனச்சித்திரம் எனக்குள் பாடமாக இருக்கிறது.*

...பகிர்வார்கள்

## ஆழமான போலி [DEEP FAKE] என்கிற ஆபத்து

கடந்த 400 ஆண்டுகளில் அறிவியல் பெருமளவு முன்னேறியுள்ளது.நம்மால் கற்பனை செய்ய முடியாதவற்றை அறிவியல் சாத்தியமாக்கி உள்ளது. இருப்பினும் உலகில் உள்ள பிரச்சினைகள் தீர்ந்து மக்கள் மகிழ்வோடு வாழ இயலவில்லை. காரணம், நவீன அறிவியலின் கண்டுபிடிப்புகள் அனைத்தும் லாப நோக்குடைய முதலாளித்துவ, தனியார்மய, பெருநிறுவனங்களின் கைகளில் உள்ளன. ஆளும் அரசுகளில் பெரும்பான்மையான அரசுகள் மக்கள் நலனுடன் இல்லை. அதனால்தான், அணுகுண்டு போன்ற பயங்கரமான ஆயுதங்கள் பல டிரில்லியன் டாலர்களை செலவழித்துத் தயாரிக்கப்படுகின்றன.

அதேபோல், பல நூற்றாண்டு கால மனித உழைப்பின் உச்சபட்ச கண்டுபிடிப்பு கணினி. அதன் பயன்பாடுகளும் மனித இனத்திற்கு முழுமையாகச் சென்றடையவில்லை. மாறாக, மக்களை ஒடுக்குவதற்கும், சுரண்டுவதற்கும், ஏமாற்றுவதற்கும், லாப வெறிக்குமே பயன்படுத்தப்படுகிறது.

நவீன கணினி அறிவியலின் கண்டுபிடிப்புகளில் ஒன்றாக DEEP FAKE ஐ பயன்படுத்தி, தற்போது போலியாக சித்தரிக்கப்பட்டு, அது தொடர்பான காட்சிகள் இணையத்தில் வெளிவருகின்றன. பலர் அதன் ஆபத்துகளைச் சுட்டிக்காட்டி பேசுகின்றனர், எழுதுகின்றனர்.

ஃபேஸ்புக், எக்ஸ் X போன்ற செயலிகளாக இருக்கட்டும், செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), Deep Fake போன்ற தொழில்நுட்பங்கள் அனைத்தும் பெரும்பான்மை மனிதர்களை ஏமாற்றுவதற்கும், அவர்களைக் கிறுக்கர்களாக மாற்றுவதற்குமே பயன்படுத்தப்படுகின்றன. இந்தப் போலிகளில் கவனமாக இருக்கப் பழகுவோம்.

**-எஸ்.விஜயபாஸ்கர் பதிவிலிருந்து**

## :ப்ளாஷ்பேக்





நடராஜன்

### பிரம்புநார் பெரிய கோயில்!

கழகப் பொன் விழா 1999-ஆம் ஆண்டு பாளையங்கோட்டையில் சிறப்பாக நடைபெற்றது. அந்த விழாவில் செங்கோட்டை நகர தி.மு.கழகம் சார்பாக பிரம்புநார் கொண்டு பின்னிச் செய்த தஞ்சை பெரிய கோயில் சிற்பத்தை, தலைவர் கலைஞர் அவர்களுக்குப் பரிசளிக்க மேடைக்குச் சென்றோம். அதனைக் கண்ட தலைவர் இன்முகத்துடன் வரவேற்று, பிரம்பு நாரால் செய்த முறையினை எங்களிடம் விளக்கமாகக் கேட்டறிந்தார். அப்படியான சமயத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது. இப்படத்தை என் வாழ்நாள் பொக்கிஷம் என்றே எண்ணுகிறேன்.

**-தில்லை கே.நடராஜன்,**
**நகர கழகப் பொருளாளர்,**
**செங்கோட்டை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி:
அன்பகம், 614, அண்ணா சாலை,
தேனாம் பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### சாதித் துறப்பு!

**1945-ஆம் ஆண்டு டிசம்பர் 9-ஆம் தேதியிட்ட ‘குடிஅரசு’ இதழில், சாதிப் பெயர் துறக்க அழைப்பு விடுக்கிறார் பெரியார். “திராவிடர் கழகத்தின் புது வருட வேலைத் திட்டமாக திராவிடர் கழக அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் அவரவர்கள் சொந்த தன்மையில் அனுசரிக்க வேண்டிய வேலைத் திட்டங்கள், 1.மதக் குறியை அணியாதிருத்தல், 2.சாதிப் பட்டங்களைத் தங்கள் பெயர்களோடு சேர்க்காதிருத்தல்” என அறிவிக்கிறார். இவற்றை நடைமுறைக்குக் கொண்டு வந்ததும், மற்ற திட்டங்கள் அறிவிக்கப் படும் என்றது ‘குடிஅரசு’.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 298




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131